கோகுலம்


GOKULAM

மார்ச் 2001 ரூ. 6/-



அபூர்வ சகோதரிகள்!







படத்தில் தவறு களைச் சுட்டிக் காட்டுங்கள்.



ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!




வழி கண்டு பிடியுங்கள்!





எந்த பிரஷ் எதற்கு உபயோகிக்கப்படுகிறது?

பிருந்தாவனம்



எத்தனை பனியன்கள் உள்ளன?





இந்திய யானை, ஆப்பிரிக்க யானை உங்களுக்குத் தெரியும். பறக்கும் வெள்ளை யானையைத் தெரியுமா?

பக்கம் - 52

இருபது ரூபாயில் உலகத்தைச் சுற்றிப் பார்க்க முடியுமா?

பக்கம் - 26

மந்திரத்தால் மாம்பழம் கிடைக்குமா? சோமுவுக்கு அப்படி ஒரு வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் அவன் என்ன செய்தான் தெரியுமா?

பக்கம் - 68

கோகுலம்




மலர் : 19 ● இதழ் : 2
மார்ச் 2001

மனிதனைப் போல் நிமிர்ந்து நடக்கக் கூடிய நாலுகால் பிராணி எது?

பக்கம் - 12





உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்

இழிவான

கனகபுரத்தின் ஜமீந்தார் கனகவேலு நல்லவர் அல்ல. அவர் யாருக்கும் எதுவும் மனதார கொடுக்க மாட்டார். அவரைப் புகழ்ந்து பேசியவர்களுக்கு மட்டுமே உதவிகள் செய்வார். கர்வமும் ஓங்கியிருந்தது. 'நாம் உதவி பண்ணாவிட்டால் இந்தப் பயல்கள் எல்லாம் பிச்சைதான் எடுக்கணும்' என்று தமக்குள் செருக்கோடு சொல்லிக் கொள்வார்.

அந்த ஊருக்கு ஒரு துறவியார் வந்து சேர்ந்தார். தன் அருள்மொழிகளால் ஊர் மக்களின் மனவேதனைகளைப் போக்கினார். ஊர் முழுவதும் அவரைப் பற்றியே பேச்சு. கனகவேலு துறவியாரைப் போய்ப் பார்க்காமல் இருந்தால் எப்படி? பழங்களைத் தட்டில் ஏந்தி, அங்கவஸ்திரத்தை இடுப்பில் கட்டிக் கொண்டு கூனிக்குறுகி மிகவும் பணிவாக இருப்பது போல் பாசாங்கு பண்ணிக் கொண்டு துறவியின் முன் போய் நின்றார் கனகவேலு.

முக்காலமும் உணர்ந்த துறவிக்கா தெரியாது கனகவேலைப் பற்றி! அவரது முகத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே உள்முகத்தைப் புரிந்து கொண்டார். பழங்களை ஏற்றுக் கொண்டார். "உட்கார் மகனே!" என்றார். கனகவேல் கையைக் கட்டி வாயைப் பொத்தி பவ்யமாக உட்கார்ந்தார். துறவி, "ம்! நிறைய உதவிகள் செய்திருக்கிறாயாம். உன் கருணை உள்ளத்தை நான் மிகவும் பாராட்டுகிறேன்" என்றார். "ஏதோ என்னால முடிஞ்சது சாமி. நானா எதுவும் பண்ணலை. என்னை அந்தக் கடவுள்தான் வழிநடத்துகிறார்" என்றார் கனகவேலு. "உன்னை மாதிரி நல்லவங்கதான் உலகத்துக்குத் தேவை. உன்னைப் பார்த்த மாத்திரத்திலேயே நீ மகா உத்தமன்னு புரிஞ்சுப் போச்சு. ஆகையால் உன்னிடம் ஒரு வேலை சொல்லலாம்ன்னு இருக்கிறேன்" என்றார் துறவி.

கனகவேலு, "நீங்க காலால இட்ட வேலையை நான் தலையால் செய்வேன். இந்த நாய்க்கு அப்படி ஒரு பாக்கியத்தைத் தரணும்" என்றார். துறவி, "இது கொஞ்சம் கஷ்டமான வேலைதான்" என்று தாடிக்குள் விரலை விட்டு துழாவியபடியே யோசித்தார். "கொஞ்ச நாளாவே என் மனசுலே ஒரு கேள்வி இருக்கு. அதற்கான விடையை என்னால கண்டுபிடிக்க முடியவில்லை. உன்னைப் பார்த்ததும் கண்டிப்பாக நீ கண்டுபிடித்து விடுவாய் என்று என் மனம் சொல்கிறது" என்றார் துறவி.

ஊரார் எல்லாம் கும்பிடும் நிலையில் உள்ள துறவி தன்னிடம் யாசகம் கேட்பது போல் பேசியதில் கனகவேலுக்குப் பெருமை பிடிபடவில்லை. ஆனாலும் அதை வெளிப்படுத்திக் கொள்ளாமல், "எல்லாம் தெரிஞ்ச நீங்க எனக்கு இப்படி ஒரு பாக்கியத்தைக் கொடுத்



பொருள் எது?

திங்களே" என்று நடித்தார். "பார்த்தவுடன் முகத்தைச் சுழிக்கும்படியான வெறுப்பைத் தரக்கூடிய இழிவான பொருள் எது என்று கண்டுபிடித்து சொல்" என்றார் துறவி. திடுக்கிட்டார் கனகவேலு. 'ஏதோ புராணங்களில் கேள்வி கேட்பார். பக்கத்து ஊருக்குப் போய் அங்கிருக்கும் புலவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு துறவியிடம் சொல்லி நல்ல பெயர் வாங்கலாம் என்று நினைத்தால் இப்படி கஷ்டமான கேள்வியைக் கேட்டுத் தொலைத்து விட்டாரே!' உள்ளுக்குள்ளே பொருமினார். ''அவசரமில்லை! நன்றாக யோசித்து விட்டு நாளை காலை சொல்லலாம்'' என்றார் துறவி. துறவியை வணங்கி விடைபெற்றார் கனகவேலு.


இரவெல்லாம் தூக்கமில்லை அவருக்கு. இழிவான பொருள் என்று எதை எடுத்துக் கொண்டாலும் அதிலும் ஏதோ ஒரு நல்ல அம்சம் இருப்பதாகவே பட்டது. யோசித்து யோசித்து உறங்கிப் போனார்.

மறுநாள் காலை கடன்களைக் கழிக்க காட்டுக்குச் சென்றார். மலம் கழித்து விட்டு எழுந்த போதுதான் அவருக்கு உதித்தது. ஆகா! அருவருப்பான இழிவான பொருள் நரகல்தானே! குளித்து விட்டுத் துறவியிடம் போய்ச் சொல்ல வேண்டும். வேகவேகமாக நடக்க ஆரம்பித்தார். "நில்!" குரல் கேட்டு திடுக்கிட்டார். சுற்றும் முற்றும் யாரும் இல்லை. "இங்கே வா!" மீண்டும் அதிகார குரல். குரல் வந்த திசையைப் பார்த்தார். பேசியது அவருடைய மலம்தான்.

''யாரை அருவருப்பான பொருள் என்கிறாய்? நான் மணம் மிக்க பழமாக, சுவைமிக்க பாலாக, கண்கவர் வண்ண உணவுப் பொருளாக இருந்தேன். என்னை நீ சாப்பிட்டதால் என் மணமும் உருவமும் சிதைந்து இவ்வாறு ஆகிவிட்டேன். எனவே நல்லவற்றையும் நாற்றமடையச் செய்யும் நீதான் இழிவான பொருள்'' என்றது மலம். கனகவேலின் கர்வம் ஒழிந்தது. குளித்து விட்டுத் துறவியைப் பார்க்கப் போனார். ''அருவருப்பான பொருள் நான்தான் ஐயா'' என்று கூறி உண்மையான பணிவோடும், பக்தியோடும் துறவியின் கால்களில் விழுந்தார். துறவி அவரை ஆரத் தழுவி ஆசிர்வதித்தார்.



— சு. துர்கா காத்யாயனி,
ஒன்பதாம் வகுப்பு, தூய அலாய்சியஸ் மகளிர் மேல்நிலைப் பள்ளி,
தூத்துக்குடி.


விஷம விச்சு
பிடி... பிடி...
விச்சுவும் கோவிந்தும் சுத்திக் கொண்டு ஓடினர்.
பிடி... பிடி...
என்னவென்று தெரியாமல் அவர்கள் பின்னால் பெரியவர்களும் ஓடினர்.
எதிர்புறம் இருந்து திருடன் ஓடி வந்தான்.
டமால்
விச்சுவும் திருடனும் மோதி விழுந்தனர்.
பெரியவர்கள் திருடனைப் பிடித்துக் கொண்டனர்.
அப்பாடா! பட்டம் அகப் பட்டுடுச்சுடா கோவிந்து.
பலே விச்சு. எங்களிடமிருந்து தப்பி ஓடிய திருடனைப் பிடிச்சுக் கொடுத் திட்டேடா. சபாஷ்!
விச்சு, நீ பட்டத்தைத்தான் துரத்தினேன்னு பாவம் அவங்களுக்குத் தெரியலைடா!



பென்சிலின் கதை!

பென்சிலைச் சாதாரணமாக எல்லோரும் ஈய பென்சில் (லெட் (Lead) பென்சில்) என்றே அழைக்கிறோம். ஆனால் பென்சிலானது கிராபைட் + ஒருவித களிமண் (Clay) கலவையைக் கொண்டே செய்யப்படுகிறது. கிராபைட் கண்டுபிடிப்பாளர்கள் 400 வருடங்களுக்கு முன்னால் ஈயத்தைப் போல ஒரு பொருள் வரைவதற்குப் பயன்பட்டதால் ஈய பென்சில் (Lead pencil) எனச் சொல்லி வைத்தார்கள்.


ஒரு பென்சில் மூலம் 56.3 கிலோ மீட்டர் நீளத்திற்குக் கோடு வரையலாம்! 17 முறை பென்சிலைச் சீவி கூர்மைப்படுத்தலாம். சுமார் 45,000 வார்த்தைகள் ஒரு பென்சிலைக் கொண்டு எழுதலாம். 'சிதார்' (Cedar) என்றொரு வகை மரத்தால் பென்சில் தயாரிக்கப்படுகிறது. மென்மையாகவும், உறுதியாகவும் இம் மரம் காணப்படுவதால் பென்சில் தயாரிக்க இம் மரம் பயன்படுகிறது. 25 வருடங்கள் ஆன சிதார் மரங்களையே பென்சில் தயாரிப்புக்குப் பயன்படுத்துகிறார்கள். 100 வருடங்கள் ஆன சிதார் மரங்கள் மிகவும் சிறந்ததாம். நல்ல பென்சில்களுக்குச் சாதாரணமாக எட்டு முறை வண்ணம் பூசப்படுகிறது.

பென்சில் என்ற சொல் லத்தீன் வார்த்தையிலிருந்து வந்ததாகும். 'கூர்மையான தூரிகை' என்று அதற்குப் பொருள். ரோமானியர்களே பென்சிலை எழுதுவதற்காக அதிகம் பயன்படுத்தினர்.

தற்போது புழக்கத்தில் இருந்து வரும் பென்சிலானது 1564ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டதாகும். அந்த ஆண்டு இங்கிலாந்திலுள்ள ஓர் 'ஓக்' (Oak) மரமானது மிகப் பலத்த காற்றில் கீழே விழ, அம்மரத்தடியில் தூய்மையான கிராபைட் கிடைத்ததாம். செம்மறி ஆடு மேய்ப்பவர்கள் இந்த கிராபைட்டைக் கொண்டு ஆடுகளின் மேல் அடையாளங்காண குறியிடப் பயன்படுத்திக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது.

'எபர்ஹார்டு ஃபேபர்ஸ் மோங்கல்'தான் உலக அளவில் புகழ் வாய்ந்த பென்சிலாகும். 1894-ம் ஆண்டு இப் பென்சில் கண்டுபிடிக்கப்பட்டு 'மோங்கல்' எனப் பெயரிடப்பட்டது. இன்று, மிருதுவாக, கடினமாக, மிதமாக என்று கையாள்பவருக்கு ஏற்ப பலவித கிராஃபைட் பென்சில்கள் தயாரிக்கப்படுகின்றன. பென்சிலின் பின்புறம் எழுதியதை அழிக்க உதவும் ரப்பரைப் பொருத்தியது அமெரிக்கர்களே!

— எஸ். ராஜகோபால்



இனிப்பு அதிகம்

கிழவி ஒருத்தி தன் பேரனை அழைத்துக் கொண்டு அண்ணல் நபிகள் நாயகத்திடம் வந்தாள். "நாயகமே! இந்தப் பையன் இனிப்பு அதிகமாகச் சாப்பிடுகிறான். நான் எவ்வளவு சொல்லியும் இவன் கேட்கவில்லை. இனிப்பு அதிகம் சாப்பிட வேண்டாம் என்று நீங்கள் இவனுக்குப் புத்திமதி கூறுங்கள். அதற்காகவே இவனை தங்களிடம் அழைத்து வந்தேன்'' என்று முறையிட்டாள்.

அமைதியாகச் செவிமடுத்த அண்ணலார் சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு மூன்று நாள் கழித்து வருமாறு கிழவியிடம் சொல்லி அனுப்பினார். மூன்று நாட்கள் முடிந்தன. கிழவி மீண்டும் சிறுவனை அழைத்துக் கொண்டு நபிகளாரிடம் வந்தாள். அண்ணலார் அந்தச் சிறுவனை அழைத்து ''தம்பி! இனிப்பு அதிகமாகச் சாப்பிடுவது உடலுக்குக் கேடு தரும். ஆகவே இனிமேல் நீ இனிப்பு அதிகம் சாப்பிடாதே'' என்று சொன்னார்.

கேட்டுக் கொண்டிருந்த கிழவிக்குக் கோபம் வந்தது. இதை அன்றே கூறியிருக்கலாமே என்று நினைத்தாள். கிழவியின் முகக் குறிப்பைப் புரிந்து கொண்ட நபிகளார் "தாயே! நீங்கள் நினைப்பது எனக்குப் புரிகிறது. உங்கள் பேரனைப்போலவே நானும் இனிப்பு அதிகமாகச் சாப்பிடுபவன். மூன்று நாட்களுக்கு முன் நீங்கள் வந்த போது எனக்கும் அந்தப் பழக்கம் இருந்தது. நானே செய்து கொண்டிருக்கும் ஒரு செயலை, இன்னொருவர் செய்யக்கூடாது என்று அறிவுரை கூறுவது எப்படி பொருத்தமாகும்? அதற்காகத்தான் மூன்று நாள் கெடு கேட்டேன்! இந்த மூன்று நாட்கள் முயன்று இனிப்புச் சாப்பிடும் பழக்கத்தை நிறுத்தி விட்டேன். இப்போது நான் அறிவுரை சொல்லத் தகுதியுடையவன்" என்று சொன்னார். கிழவி திகைத்து நின்றாள்.

தீபாவளி கொண்டாடாத தலைவர்

தீபாவளித் திருநாள். ஊரெங்கும் கொண்டாட்டம். தெருவெல்லாம் பட்


டாசு முழக்கம், வாண வேடிக்கைகள்.

தங்கை பட்டாசு கொளுத்தி மகிழ்ந்து கொண்டிருந்தாள். உடன் நின்றிருந்த அண்ணன் தங்கையின் மகிழ்ச்சியை ரசித்துக் கொண்டிருந்தான். திடீரென எதிர் பாராத விதமாக தங்கையின் பாவாடையில் தீப்பிடித்துவிட்டது. அண்ணன் துடித்துப் போனான். ஆனால் அவளைக் காப்பாற்ற முடியவில்லை. தங்கை மரணம் அடைந்ததால் அண்ணன் அதிர்ச்சியால் கல்லாய்ப் போனார்.

அதற்குப் பிறகு கடைசிவரை தன் குடும்பத்தில் தீபாவளிக்குப் பட்டாசு வெடிப்பதற்குத் தடைவிதித்துவிட்டார் அந்த அண்ணன். அவர்தான் கண்டிப்பில் சிறந்து விளங்கிய மொரார்ஜி தேசாய்.



சாப்பிட வேண்டாம்!



அவரது பிறந்த நாள் 1896ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 29ஆம் தேதி ஆகும். அந்த ஆண்டு லீப் ஆண்டு. எனவேதான் அவரது பிறந்த நாளும் நான்கு ஆண்டுக்கு ஒரு முறை வந்தது. 1958இல் மத்திய அமைச்சரவையில் நிதியமைச்சர் பதவியினை ஏற்றுத் திறம்பட நிர்வாகம் செய்தார் மொரார்ஜி தேசாய்.

சுத்தம் செய்தவர்!

இந்தியாவின் மூன்றாவது ஜனாதிபதி டாக்டர் ஜாகிர் உசேன் ஆவார். இவர் 1897ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3ஆம் தேதி பிறந்தார்.

சில ஆண்டுகள் அவர் ஆசிரியராகப் பணியாற்றினார்.

ஒருமுறை வகுப்பறையில் பாடம் நடத்த நுழைந்தார். பாடம் துவங்குவதற்கு முன் தன் கோட்டுப் பையில் இருந்த சில கிழிந்த காகிதத் துண்டுகளை எடுத்து மேசை மீது போட்டார்.


இந்தக் குப்பைகள் வழியில் கிடந்தன. எனவே அதை அவரே துப்புரவு செய்ததையும் சொன்னார். மாணவர்கள் வெட்கித் தலை குனிந்தார்கள். அன்று முதல் வகுப்பையும், சுற்றுப் புறத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ள மாணவர்களே முன் வந்தனர்.


மாணவர்களுக்குத் தாமே முன் உதாரணமாக விளங்கினார் டாக்டர் ஜாகிர் உசேன்.


- **சு. கண்ணகி, பிட்டூர்.**

அதிகமான சொத்து யாருக்கு?

வேணுவாரியத்,
எம். மோகன்தாஸ்











நான் இந்த பங்களாவை எடுத்துக் கொள்கிறேன்.
நல்லது!
சமீர் இரண்டாவது மகனைப் பார்த்தார்.
உனக்கு என்ன வேணும்?
3000 ஏக்கர் திராட்சைத் தோட் டத்தை எடுத்துக் கறேன்.
எடுத்துக்க.
SAI FEATURES, ALUVA-7
புத்திசாலி மகன் சமதைப் பார்த்தார் சமீர்.
உனக்கு என் னப்பா வேணும்?
உங்க சொத்தில் சலமும் ஒரு பகுதி தானே?
அதனால் நான் சல மையே எடுத்துக் கறேன்.
என்ன ஒரு புத்தி சாலித்தனமான தேர்வு!
சமீர் மீதி சொத்து முழுவதையும் பேராசைப்படாத சமதிடம் ஒப்படைத்தார்.

எங்கள் ஊரில் நடந்தது!

"நீ பால்கனிக்குப் போனால் நான் மொட்டை மாடி செல்வேன்!"

தாத்தா!

எங்கள் வீட்டுப் பக்கத்தில் உள்ள குழந்தைக்கு இரண்டரை வயதாகிறது. மழலையில்தான் பேசுவான். அவனுக்கு 'க' என்ற எழுத்து உச்சரிக்க வராது. அக்காவை அத்தா என்று தான் சொல்லு



வான். அவனைப் பிடித்து வைத்து 'க' உச்சரிக்க வைப்பதுதான் எங்களுக்கு விளையாட்டு. ஒரு நாள் தெருவில் விளை யாடிக் கொண்டிருந்த அவன் வீட்டுக்குள் ஓடி வந்து "தாத்தா செத்துப் போச்சு" என்று வாசலைக் காட்டினான். எதிர் வீட்டில் ஒரு வயதான தாத்தா இருந்தார். எனவே பயந்து போய் நானும் அப்பாவும் வாசலுக்கு ஓடினோம். அங்கு மின் கம்பி யில் அடிப்பட்டு ஒரு காக்கா செத்துக் கிடந்தது. பிறகுதான் நிம்மதி ஏற்பட்டது.

சு. சௌம்யாயனி, ஏழாம் வகுப்பு, புனித அலாய்சியஸ் மகளிர் மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.

மேஜை

எங்களுடைய உறவினர் மகன் பிரசாந்த் படிக்கும் மாணவன். புத்தகம் நோட்டு களை வைத்துக் கொள்ளும் மேஜையை ஒழுங்காக வைத்துக் கொள்ள மாட்டான். எல்லாவற்றையும் தாறுமாறாக மேஜையின்மீது போட்டு வைத்திருப்பான். எவ்வளவோ தடவை சொல்லி அலுத்துப் போன அவனுடைய அம்மா, ஒரு நாள் 'இது பிரசாந்தின் மேஜை' என ஒரு அட்டையில் எழுதி வைத்துவிட்டார். மாலையில் வீட்டிற்கு வந்த பிரசாந்த் அதைப் பார்த்து திடுக்கிட்டு, உடனே மேஜையைச் சுத்தம் செய்தான். இருந்தாலும் மறுநாள் முதல் பழையபடி தாறுமாறாகப் போட ஆரம்பித்தான். இதனைப் பார்த்த அவனுடைய அம்மா, மேஜையின் மேல் ஒரு ஆணியை அடித்து, அதில் இது பிரசாந்தின் மேஜை என்ற போர்டை நிரந்தரமாய் மாட்ட அன்று முதல் ஒழுங் காக அடுக்க ஆரம்பித்துவிட்டான்.

- இரா. திலீப், திருச்சி.

எங்கே?

எங்கள் வீட்டில் கூட்டுக் குடும்பம். என் தம்பி கொஞ்சம் வால். ஏதாவது ஒரு பாட்டு ஹிட்டாகிவிட்டால் அதை கிட்ட தட்ட ஒரு மாதமாவது பாடிக் கொண்டே யிருப்பான். ஒரு நாள் நாங்கள் அனை வரும் வேலை பார்த்துக் கொண்டிருந்த பொழுது, வெளியே எங்கேயோ விளையாடிவிட்டு வந்த என் தம்பி, வீட்டின் உள்ளே நுழைந்த தும் "ஐயோ பத்திகிச்சு, ஐயோ



பத்திகிச்சு''ன்னு கத்தினான். நாங்கள் அனைவரும் ''என்னடா, எங்கே பத்தி இச்சு? எந்த வீட்ல'' என்று கேள்வி கேட்க, அவனோ திருதிருவென்று விழித்தான். நாங்கள் மிரட்டி கேட்டபோது ''பாட்டு பாடினேன்'' என்று சொல்ல அப்பொழுது தான் புரிந்தது. சட்டென்று சிரித்து விட்டோம்.

- சங்கை குப்பு, நெய்வேலி.

மட்டம்!

என் வகுப்புத் தோழிகள் இருவர் மிகவும் நெருங்கிய உறவினர்கள். ஒருவரை ஒருவர் மட்டம் தட்டிப் பேசிக்கொண்டே



இருப்பார்கள். உன்னைவிட நான் ஒசத்தி என்று மாறி மாறி சொல்வார்கள். ஒருநாள் நாங்கள் உணவு இடைவேளையின்போது பேசிக் கொண்டிருந்தோம். ஒருத்தி கைகழுவப் போய்விட்டாள். பத்தாம் வகுப்பு முடித்தவுடன் என்ன செய்வது என்று விவாதித்தோம். இருவரில் ஒருத்தி ''நான் பாலிடெக்னிக்கில் படிக்கப் போகிறேன்'' என்றாள். கைகழுவி விட்டு வந்த மற்றொருத்தி நாங்கள் பேசியதை அரைகுறையாகக் கேட்டுவிட்டு ''நீ பால் கனிக்குப் போய் படிச்சா நான் மொட்டை மாடியில் போய் படிப்பேன்'' என்று கூற அனைவரும் சிரித்தோம்.

சு. துர்கா காத்யாயனி, ஒன்பதாம் வகுப்பு, புனித அலாய்சியஸ் மகளிர், மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி.



பெல்லாரியும் வெங்காயமும்

பெரிய வெங்காயம் அரை கிலோ வாங்கும்படி சொல்லி பணம் கொடுத்து என்னையும், 12 வயதான எனது அக்காவையும் மளிகைக் கடையில் இறக்கிவிட்டார் அப்பா. நான் போய் ''பெரிய வெங்காயம் அரை கிலோ வேண்டும்'' என்றேன். நாங்கள் போனதோ பண்டிகை வேளை. கூட்டம் அதிகமிருந்தது. சிறிது நேரம் கழித்து ''பெல்லாரி யாருக்கு?'' என்றார் கடைக்காரர். ஒருவரும் பதில் சொல்ல வில்லை. ''இந்த சிறுமிகளுக்குத்தான்'' என்றார் ஒருவர் உடனே அவசரமாக, ''நான் வெங்காயம் வாங்க வந்தேன். பெல்லாரி எனது மாமாவின் ஊர். பத்து ரூபாய்க்கு ஒரு ஊர்கூட கிடைக்குதா?'' என்று கேட்டேன். கடைக்காரர் வியப் புடன் பார்த்தார். கூடி இருந்த அனை வரும் கொல்லென சிரித்தனர். ''பாப்பா! உனது மாமாவின் ஊர் பத்து ரூபாய்க்கு வாங்க முடியாது. இதுதான் பெல்லாரி. அதான் பெரிய வெங்காயம். அதை வாங்கலாம்'' என்றார் சிரித்த படி கடைக் காரர். உடன் நாங்களும் சிரித்து விட்டோம்.



- சு. பூமா. கும்பகோணம்.





காடுகளில் வாழும் வலிமை மிகுந்த விலங்குகளில் கரடியும் ஒன்று. இதன் தலை பெரியது. கண்



தேன் இரும்பிகள்!



சிறியது. காது வட்ட வடிவமாக இருக்கும். உடல் பருத்திருக்கும். வால் மிகச் சிறியது. உடல் முழுவதும் நீண்ட முடி அடர்ந்து காணைப்படும். பாதம் தட்டையாக இருக்கும். முன்னங்கால்கள் உறுதியானவை. கால் நகங்கள் கூர்மையாகக் காணப்படும்.

கரடிகளில் பல வகைகள் உள்ளன. பெருநாட்டில் காணப்படும் கரடியின் கண்களைச் சுற்றி வெண்மையான வட்டங்கள் இருக்கும். இக் கரடியை மூக்குக் கண்ணாடி கரடி (spectacled bear) என்கின்றனர். வட துருவத்தில் வாழும் கரடியைத் துருவக்கரடி அல்லது பனிக்கரடி என்பர் (polar bear). மிதவெப்ப மண்டலங்களில் பழுப்பு மற்றும் கருங்கரடிகள் உள்ளன. இந்தியாவிலும் தென்கிழக்கு ஆசியாவிலும் பன்றிக் கரடிகள் (sloth bear) அதிகம் காணப்படுகின்றன. அமெரிக்காவில் வாழும் பழுப்புக் கரடிகளே மிகவும் பெரியவை. இவை



எஸ். சுஜாதா

மூன்று மீட்டர் உயரமிருக்கும்.

இவை மிகவும் பலம் பொருந்தியவை. இதனால் மற்ற பலசாலி விலங்குகள் இவற்றிடம் சண்டையிடுவதில்லை. எனினும் கரடிகள் சிறு பிராணிகளையே பிடித்துத் தின்னுகின்றன.

கரடியால் நான்கு கால்களால் மற்ற பிராணிகளைப் போல் நடக்கவும்



முடியும். மனிதனைப் போல் இரண்டு கால்களால் நிமிர்ந்து நடக்கவும் முடியும். இது ஒரு பக்கத்துக் கால்கள் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து அடி எடுத்து வைக்கும். அதனால் பக்கத்துக்குப் பக்கம் அசைந்து நடப்பதாகத் தோன்றும். என்றாலும் விரைந்து ஓடும் மனிதனை எட்டிப் பிடிக்கக்கூடிய அளவுக்கு வேகமாக ஓடும்.

மிகவும் பலம் பொருந்தியவை. இதனால் மற்ற பலசாலி விலங்குகள் இவற்றிடம் சண்டையிடுவதில்லை.

மரத்தில் ஏறும், நன்றாகத் தண்ணீரில் நீந்தும்; இதற்குக் கேட்கும் சக்தியும் மோப்ப சக்தியும் அதிகம். கோபம் வந்தால் மனிதரையும் தாக்கக்கூடியது.

மாமிசத்தை உண்ணக்கூடியது கரடி. பழம், தேன், வேர், பூச்சிகளையும் விரும்பி உண்ணும். சில வகைக் கரடிகளுக்குக் கறையான் மீது விருப்பம் அதிகம். வெப்பமான காலங்களில் இரை தேடி அலையும். குளிர்காலங்களில் உறங்கிக் கழிக்கும். குளிர்காலத்தில் தான் கரடி குட்டி போடும். குட்டியைத் தாய் கவனமாக வளர்க்கும். ஒரு தடவைக்கு 2 முதல் 3 குட்டிகள் வரை பிறக்கும். குட்டி பிறக்கும் போது மிகவும் சிறியதாகவும் முடிகளற்றும் காணப்படும். மூன்று வயது வரை தாயுடனே வசிக்கும்.

பொதுவாகக் கரடிகள் 40 முதல் 50 ஆண்டுகள் வரை உயிர் வாழக்கூடியவை. குளிர்காலங்களில் கரடிகளின் தோலில் முடிகள் அதிகமாகக் காணப்படும். அந்த முடிகளைக் கொண்டு ஆடைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்த ஆடைகள் மிகவும் விலை உயர்ந்தவை.

பனிக்கரடி :

வடதுருவத்தில் பனிக்கட்டிகளிலேயே வாழ்கிறது இது. இதன் உரோமம் மிக அடர்ந்து, உடல் வெப்பம் வெளியேறாமல் காக்கும். தோலுக்கு அடியில் கொழுப்புப் படிந்திருக்கிறது. இதுவும் வெப்பத்தைக் காக்கிறது. தோலில் இருக்கும் சுரப்பிகளிலிருந்து எண்ணெய் சுரக்கும். இது கரடி

நீரில் நீந்தும் போது உடல் நனையாமல் பாதுகாக்கிறது. பனிக்கரடி நீரில் நன்றாக நீந்திச் சென்று மீனைப் பிடிக்கும். நீந்தும் உயிர்களைப் பிடிப்பதற்காகப் பனிக்கரடியின் கழுத்து நீண்டும், தலை சிறுத்தும் காணப்படுகிறது. இது மிகவும் சுறுசுறுப்பானது. தாய், பனியில் பறித்த குழியிலேயே குட்டி போடும்.

பழுப்புக்கரடி : மற்றக் கரடிகளை விட மிகவும் சாதாரணமானது. பல நாடுகளில் காணப்படுகிறது. விலங்குக்கு விலங்கு நிறத்தில் வேறுபடும். கரும்பழுப்பு முதல் வெண் பழுப்பு வரை பல நிறங்களில் இருக்கும். சாதாரணமாக 5 அடி 8 அங்குலம் நீளம் வரை வளரும். இமயமலை, ஆசியா, ஐரோப்பா, வடஅமெரிக்காவில் இது வாழ்கிறது. கற்களைப் புரட்டிப் போட்டு பூச்சிகளை உட்கொள்ளும். உணவு கிடைக்காத காலங்களில் அழுகிய பிணங்கள், ஆடுகள், வயதான குதிரைகளைக் கொன்று தின்னும். இது மரம் ஏறாது.



• கருங்கரடி

கருங்கரடி : இது பழுப்புக் கரடியைப் போன்றே பழக்கவழக்கமுடையது. கனடா, இந்தியா, ஆசியாவில் அதிகமாகக் காணப்படுகிறது. மிருகக் காட்சி சாலைகளில் இந்தக் கரடியே வளர்க்கப்படுகிறது. இது மனிதரைப் போன்றே நிமிர்ந்து நிற்கும்; தலைகீழாக நிற்கும்; நடனமாடும்; உணவு கேட்கும். இதை அமெரிக்கர் காட்டுக் கோமாளி என்று அழைக்கிறார்கள்.

இமயமலைக் கருங்கரடி : இந்தியாவில் காஷ்மீர், அஸ்ஸாம் பகுதிகளில் இது வாழ்கிறது. இதை 'இமய மலைக் கருங்கரடி' என்பர். சீனா, ஜப்பான், பர்மா, மலேசியாவிலும் காணப்படுகிறது. இதன் உரோமம் குட்டையாகவும் வழுவழுப்பாகவும் இருக்கும். நகங்கள் கூர்மையானது. மார்பில் V வடிவ வெண்மை அல்லது மஞ்சள் கலந்த பழுப்பு நிற அடையாளமிருக்கும். பகலில் உறங்கிக் கிடந்து, இரவில் உணவு தேடும்.

பன்றிக்கரடி: இந்தியாவில் மிகச் சாதாரணமாகக் காணப்படுகிறது. இந்தியா மற்றும் இலங்கைக் காடுகளில் வசிக்கிறது. நீண்ட முகமும், முரட்டு உரோமமும், குட்டையான பின்னங்கால்களும் கொண்டது. பகலில் இரை தேடாது. வெப்பம் இல்லாத காலங்களில் பகலில் வெளியே வரும். தன் பலமான கால்களால் கிழங்குகளையும் கறையான் புற்றுகளையும் தோண்டும். கறையான் புற்றில் வாய் வைத்து உறிஞ்சிக் கறையான்களைச் சாப்பிட்டுவிடும். பழங்களுக்காக மரத்தை உலுக்கும். கரும்பு, சோளம் முதலியவற்றைக் கொள்ளை இடும். இலுப்பைப் பூ என்றால் இதற்கு விருப்பம் அதிகம்.

> “மனிதரைப் போன்றே நிமிர்ந்து நிற்கும்; தலைகீழாக நிற்கும்; நடனமாடும்; உணவு கேட்கும்.”



அடுத்த இதழில்...


சாதாரண
மாணவர்களாக
இருந்த
இளங்கோ,
அருள்மொழி,
நெடுமாறன்,
பல்லவி
ஆகியோரை
அந்தச்
சம்பவம்
அக்னிக்
குஞ்சுகளாக
மாற்றுகிறது...

டாக்டர்
பூவண்ணன்
எழுதும்
அக்னிக் குஞ்சுகள்!

- திகில், திருப்பங்கள் நிறைந்த புதிய தொடர்கதை ஆரம்பம்

ஏமாற்றத்தைத் தவிர்க்க இப்பொழுதே உங்கள் ஏஜெண்டிடம் சொல்லி வையுங்கள்.

உங்களுக்கு இது பரீட்சை நேரமாக இருப்பதால் நாடகப் போட்டி ஏப்ரல் மாதத்திற்கு ஒத்தி வைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவு நாடகப் போட்டி

1. இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் (+2 உட்பட) மட்டுமே கலந்து கொள்ளலாம்.

2. நாடகங்கள் சிறுவர்களுக்கானதாக இருக்க வேண்டும். நகைச்சுவை, துப்பறிதல், சமூகம், வரலாறு, அறிவியல் என எதைப் பற்றி வேண்டுமானாலும் இருக்கலாம். சொந்தக் கற்பனை என்று உறுதி மொழியுடன் அனுப்ப வேண்டும்.

3. வெள்ளைத் தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதலாம். கையெழுத்து தெளிவாகப் புரியும்படி இருக்க வேண்டும்.

4. பரிசு பெறாத, பிரசுரத்துக்கு ஏற்கப் படாத நாடகங்களைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகளை ஒட்டிய உறையை நாடகத்துடனேயே இணைக்க வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை. இது குறித்து எந்தவிதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

5. இதில் கலந்து கொள்ள கட்டணம் ஏதும் இல்லை. ஒருவரே எத்தனை நாடகங்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

6. நாடகங்களை முதல் முறை வெளியிடும் உரிமை கோகுலத்திற்கே உண்டு. பிறகு இதன் உரிமை முழுவதும் ஆசிரியருக்கே.

7. முடிவு தேதி **30.4.2001.** இதற்கு மேல் வருபவை பரிசிலனைக்கு ஏற்கப்படமாட்டாது.

8. அயல்நாட்டில் உள்ளவர்கள், இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியைக் கட்டாயம் தரவேண்டும்.

9. நாடகங்களை **ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை – 600 097** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் மேல் **'அழ.வள்ளியப்பா நினைவு நாடகப் போட்டி'** என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.

10. போட்டி குறித்து எழும் எவ்விதப் பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஆசிரியர் எடுக்கும் தீர்ப்பே முடிவானது.

முதல் பரிசு – ரூ. 500/-
இரண்டாம் பரிசு – ரூ. 300/-
மூன்றாம் பரிசு – ரூ. 200/-

துணிச்சலாக இறங்க வேண்டும்!

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு!

இந்தக் குறளுக்கு பொருள், உங்களில் பலருக்குத் தெரிந்திருக்கலாம். ஒரு காரியத்தைச் செய்யத் துவங்கும் முன்னரே, அதன் சாதக பாதகங்களை அலசி ஆராய்ந்த பின்னர்தான் அதில் இறங்க வேண்டும். அந்தக் காரியத்தில் இறங்கிய பிறகு, பாதி கிணறு தாண்டிய நிலையில் 'ஏன்தான் இதில் இறங்கினோமோ' என்று வருத்தப்படக் கூடாது. வாழ்க்கையின் எல்லா கட்டங்களிலும், இந்தக் குறள் காட்டும் நெறி நம்மை வழி நடத்தும் என்றாலும், ஒருவன் தொழில் ரீதியாக திரைப்பட உலகைத் தேர்ந்தெடுக்கிறான் என்றால் அதில் நுழையும் முன்னர் அவன் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டியது இந்தக் குறளின் பொருளைத்தான். அப்படி அவன் சிந்தித்து முடிவெடுத்து திரைப்படத் துறையில் காலூன்றுவது என்று முடிவெடுத்து இறங்கிவிட்டால் அப்புறம் திரும்பிப் பார்க்கக் கூடாது. சென்னையிலிருந்து மதுரைக்குச் செல்வது என்று ரயிலேறி திருச்சியில் இறங்கக் கூடாது. போராட வேண்டும். வெற்றி நிச்சயம். லட்சியத்தைக் கைவிடக் கூடாது.

திரைப்படத் துறையில் சேரப் போகிறேன் என்று ஒருவன் சொன்னால் பெரும்பாலும் ஊக்கம் கொடுக்காமல் பயமுறுத்துபவர்கள்தான் அதிகம் இருப்பார்கள். "ஐயோ... ரொம்பக் கஷ்டப்பட வேண்டுமே. நிரந்தர வருமானம் கிடையாதே. பிராவிடண்ட் ஃபண்ட், பென்ஷன் கிடைக்காதே. எதாவது கவர்மெண்ட் உத்யோகம் பார்த்துக் கொண்டு போ" என்று சொல்வார்கள். இந்தப் 'பாதுகாப்பு' மனப்பான்மைதான் ஒருவனை முடக்கி வைத்து விடுகிறது என்பது என் அழுத்தமான நம்பிக்கை. 'நமக்குத் திறமை இருக்கிறது. நம்மால் பளிச்சிட முடியும்' என்று ஒருவன் மனப்பூர்வமாக எண்ணினால் 'பாதுகாப்பு' மனப்பான்மையை தூக்கிப் போட்டுவிட்டு எதிர்நீச்சல் போடத் துணிந்திட வேண்டும். வாழ்க்கையின் துவக்கக் கட்



டத்தில் 'ரிஸ்க்' எடுக்கத் தயங்குபவர்கள் வெற்றியைக் கோட்டை விடுகிறார்கள் என்பது என் கருத்து.

சிறு வயதில் திரைப்படங்களைப் பார்த்துவிட்டு, 'நாமும் நடிக்க முடியாதா! நாமும் திரைப்படங்களை இயக்க முடியாதா' என்று ஏக்கப் பெருமூச்சு விடுபவர்கள் சரியான பருவத்தில் களத்தில் குதிக்க வேண்டும்.

ஆனால் திரைப்படத்துறையில் நுழைய வேண்டும் என்று பொத்தாம் பொதுவாக தீர்மானிக்கக் கூடாது. அதில் எந்தப் பிரிவில் புகுந்து செயல்பட வேண்டும் என்பதையும் முதலிலேயே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். நடிப்புத் துறையா? காமிரா கலைஞரா? அல்லது இயக்குனர் ஆக விருப்பமா? நடிப்புத்துறை என்றால் ப்ளஸ் டூ முடித்த பின் நடிப்புப் பயிற்சி கல்லூரியில் சேர்ந்து கொள்ளலாம். நடிப்பு மட்டுமல்ல திரைப்பட கலை பற்றிய எல்லாவற்றுக்கும் இப்போது பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. படிக்காத மேதைகளும் படவுலகில் உண்டு. ஸ்டில் போட்டோகிராபி எடுக்கும் அனுபவம் இருந்தால் காமிராகாரராக வருவதற்கு நல்ல அடித்தளம்.

இயக்குனராக வருவதற்கு விருப்பம் இருந்தால் சிறு வயதிலிருந்தே அதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். உங்கள் நண்பர்களைக் கூட்டி வைத்து கதை, வசனம் எழுதி நாடகம் போடலாம். சுதந்திர தின விழா, பொங்கல் போன்ற நாட்களில் நீங்கள் இருக்கும் பகுதியைச் சேர்ந்த சிறுவர்களைக் கூட்டி, பாட்டுப் போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி நடத்தலாம். வானொலியில், தொலைக்காட்சியில், சிறுவர், சிறுமியருக்கென்று நிறைய நிகழ்ச்சிகள் வருகின்றன. அதில் கலந்து கொள்ள முயற்சி செய்யலாம். கற்பனைத் திறனை வளர்த்துக்



இயக்குனர் வஸந்த்

கொள்ள வேண்டும். சிறு வயதில் நானும் இப்படித்தான். எங்கள் பகுதியில் பாட்டு, நடனம், நாடகம் என்று ஏரியாவையே அவ்வப்போது கலக்குவோம். சென்னை தொலைக்காட்சி நிலையம் துவங்கிய போது, முதல் நாள் நடந்த சிறுவர் நிகழ்ச்சியில் நானும் பங்கு கொண்டேன். அப்புறம் கல்லூரி படிப்பு முடித்தபிறகு என் கவனம் எழுத்தில் சென்றுவிட்டது. பத்திரிகையாளனாக சிறிது காலம் வலம் வந்தேன். என் குருநாதர் பாலசந்தர் அவர்களைப் பற்றி எழுதுவதற்காக அவரை அடிக்கடி சந்திக்க வேண்டியிருந்தது. அவருக்கு என்னைப் பிடித்துப் போய்விட்டது. அவரது உதவியாளராகச் சேர்த்துக் கொண்டார். எனக்குக் கிடைத்தது போன்ற வாய்ப்பு பலருக்குக் கிடைக்காது.



ஒரு இயக்குனராக வர விரும்புகிறவர், முதலில் யாரிடமாவது உதவியாளராகச் சேர வேண்டும். எனக்குத் தெரிந்த பெரியவர்கள், உறவினர்கள் அவர்களது பையனை என்னிடம் கூட்டி வந்து "பையன் எதுக்கும் பிரயோஜனமில்லை. தண்டத்துக்கு ஊர் சுற்றிக்கிட்டு இருக்கான். உங்க உதவியாளராகவாவது சேர்த்துக் கொள்ளுங்களேன்'' என்பார்கள். எனக்குக் கோபமாக வரும். 'எதுக்கும் லாயக்கில்லாதவன் தான் சினிமாவில் சேர வேண்டும்' என்ற அவர்களது மனோபாவம் கொஞ்சம்கூட சரியில்லை. இன்னமும் சொல்வதனால் சினிமா துறையில் இருப்பவன்தான் சமுதாயத்தின் நாடி, நரம்புகளை உணர்ந்தவனாக இருக்க வேண்டும். அன்றைய நாள்வரை உலகத்தின் நடப்புகளை அவன் தெரிந்து வைத்துக் கொண்டிருக்க வேண்டும். நிறைய படிக்க வேண்டும்; கேட்க வேண்டும். சமுதாயத்தை வழி நடத்திச் செல்வதில் அவனுக்குப் பெரிய பொறுப்பு இருக்கிறது.

'பாதுகாப்பு மனப்பான்மை'தான் ஒருவனை முடக்கி வைத்து விடுகிறது என்பது என் அழுத்தமான நம்பிக்கை.

ஒருவன் ஒரு இயக்குனரிடம் உதவியாளராகச் சேர்ந்துவிட்டால், அதன்பின் தான் அவன் மிகப் பொறுப்புள்ளவனாக இருக்க வேண்டும். ஏனென்றால், அவனுடன் வேலை செய்யும் கலைஞர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள், அவனுக்கு முன்னரே அந்தத் துறையில் இருப்பார்கள். அவன் செயலும், பேச்சும், எந்தவிதத்திலும் அவர்கள் உணர்வுகளைப் பாதிக்கும்படி இருக்கக் கூடாது. கண்களையும், காதுகளையும் திறந்து வைத்துக் கொள்ளுங்கள். வாயை மட்டும் மூடி வைத்துக் கொள்ளுங்கள். ஒரு இயக்குனர் என்பவர் 100 நபர்களோடு இணைந்து வேலை செய்தாக வேண்டும். ஐ.க்யூ என்பது போல இப்போதெல்லாம் இ.க்யூ அதாவது Emotional Quotientக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் பாங்கு, நவரைச் சுட்டிக் காட்டும் போக்கு ஆகியவைகள் ஒருவனது வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன. மென்மையான பேச்சுக்கள் ஏற்றத்தைக் கொடுக்கும். யார் நல்ல கருத்துக்களைச் சொன்னாலும் எடுத்துக் கொள்ளும் பக்குவம் வேண்டும். நீங்கள் தடுக்கி விழுந்தால் உங்களைப் பார்த்து கைகொட்டிச் சிரிப்பதற்கு நிறைய நபர்கள் இருப்பார்கள். பலமுறை தடுக்கி விழுந்தவுடன்தானே குழந்தைகள் நடக்கத் துவங்குகின்றன. எனவே, அதைப் பற்றியெல்லாம் கவலைப் படாமல், தூசியைத் தட்டிக் கொண்டு முயற்சிகளைத் தொடர வேண்டும்.

என் குருநாதர் பாலசந்தர் அவர்களிடம் 18 படங்களில் உதவி இயக்குனராக நான் பணிபுரிந்திருக்கிறேன். அவரே பார்த்து என்னைச் சேர்த்துக் கொண்டாலும் யூனிட்டிலுள்ள ஸீனியர்களிடம் நான் கற்றுக் கொண்ட நுணுக்கங்கள் அதிகம். எழுத்தாளனாக வர வேண்டும் என்று நான் விருப்பப் பட்டாலும், என் உள் மனதில் எங்கோ

ஒரு மூலையில் திரைப் படத்துறையைப் பற்றிய ஆர்வம் நீறுபூத்த நெருப்பாக இருந்திருக்கிறது. வாய்ப்புக் கிடைத்ததும் சாம்பல் அகன்று விட்டது. என் சகோதரர்கள் அனைவரும் அரசு, வங்கி என்று பாதுகாப்பான வேலைகளில் இருப்பவர்கள் தான். எனவே அவர்களுக்கு என்னைப் பற்றிய பயம் இருந்திருக்கக் கூடும்.

இயக்குனராக வருவதற்கு விருப்பம் இருந்தால் சிறு வயதிலிருந்தே அதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.



திரைப்படத் துறையில் சேர வேண்டும் என்று ஊரிலிருந்து மஞ்சள் பையுடன் சென்னைக்கு வந்து பசி, பட்டினியில் பல பேர் சிரமப்படுவதாக சொல்லப்படுவதுண்டு. அதற்கான அவசியமே தற்போது இல்லை என்பது என் கருத்து. எடுத்தவுடன் வாய்ப்பு கிடைக்காவிட்டால், வேறு எதாவது வேலையில் சேர்ந்து கொண்டு முயற்சிகளைத் தொடரலாம். சென்னையில் நிச்சயம் எதாவது ஒரு வேலை கிடைக்கும். நிறைய நல்ல படங்களைப் பாருங்கள். அது போல மோசமான படங்களையும் பார்க்க வேண்டும். எப்படியெல்லாம் படம் எடுக்கக் கூடாது என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டுமே!

அப்புறம் ஒரு இயக்குனருக்கு முக்கியமாக இருக்க வேண்டியது சமுதாயப் பொறுப்பு. அவனது படங்கள் ஒவ்வொன்றும் நல்ல கருத்தை, நல்ல நீதியை மக்களுக்குச் சொல்வதாக இருக்க வேண்டும். மக்களைக் கவருவதற்குக கொஞ்சம் மசாலாக்களைச் சேர்த்தாலும், நல்ல விஷயத்தைச் சொல்ல வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். எந்தக் காரணம் கொண்டும், ஒரு இயக்குனர் எடுக்கும் படங்கள் சமுதாயத்தில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்திவிடக் கூடாது. என்னுடைய முதல் படமான 'கேளடி கண்மணி' முதல் சமீபத்திய படமான 'ரிதம்' வரை ஒவ்வொரு படத்திலும், ஒரு நல்ல கருத்தை அடிநாதமாக வைத்துத்தான் செய்திருக்கிறேன்.

சினிமா உலகத்தில் பணியாற்றும்போது உங்கள் தன்மானத்துக்குச் சோதனைகள் அதிகம் வருவதற்கு வாய்ப்பு உண்டு. பலவற்றைத் தாங்கிக் கொள்ள மனத்திடம் வேண்டும். எந்தச் சூழலிலும் இருக்கும் இடத்தை விட்டு ஓடிவிட முயலக் கூடாது. நான் சொல்லியிருக்கும் விஷயங்கள் திரைப்படத் துறையில் எந்தப் பிரிவில் பணிபுரிந்தாலும் பொருந்தும். உங்களுக்குப் பொறுமையும் திறமையும் இருக்கும் பட்சத்தில் உங்களை தூற்றியவர்கள்கூட பிற்காலத்தில் உங்களைத் தேடி வருவது திரைப்பட உலகில் வாடிக்கை.

தொகுப்பு : ப்ரியன்

100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு!

தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்ட வாசகர்களுக்கான போட்டி. இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் முதல் 100 வாசகர்களுக்கு ஜாமெட்ரி பாக்ஸ் வழங்க இருக்கிறோம். போட்டியில் கலந்து கொள்வதுடன் விரைவில் அனுப்பியும் வைக்க வேண்டும்.

இந்த மாதப் போட்டி: நேரம் சம்பந்தப்பட்ட பொன்மொழிகள். அடுத்த மாதம் வேறு நான்கு மாவட்டங்களுக்குப் போட்டி தொடரும். வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். பரிசை வெல்லுங்கள்!



ஓவியப் போட்டி

இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: இயற்கை காட்சிகள். இந்தத் தலைப்பைப் பார்த்தவுடன் உங்களுக்கு என்னவெல்லாம் நினைவுக்கு வருகிறதோ அவற்றை எல்லாம் வரையலாம். படம் வண்ணத்தில் இருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. முழு முகவரி தரவும்.

கடைசி தேதி:
20.3.2001

கோகுலம் க்விஸ்

1. சமீபத்தில் கும்பமேளா நடந்த இடம்?
a. ஹைதராபாத், b. அலகாபாத், c. செகந்திரபாத்

2. குறிஞ்சி மலர் எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும்?
a.22, b.18, c.12

3. தமிழ்நாட்டைச் சேர்ந்த பாரத ரத்னா விருது பெற்ற இசையரசி?
a. லதா மங்கேஷ்கர், b.எம்.எஸ். சுப்புலட்சுமி, c. நித்யஸ்ரீ

4. சென்னை, மும்பையை அடுத்து பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள நகரம்?
a. லக்னோ, b. கல்கத்தா, c. பெங்களூர்

5. சமீபத்தில் இந்தியாவுக்கு வந்த சீன அதிபர்?
a. லீபெங், b. மாவோ, c. லீயுவான்

6. சீல் எங்கு வாழ்கிறது?
a. ஆறு, b. குளம், c. கடல்

7. ரேடியோவைக் கண்டறிந்தவர்?
a. எடிசன், b. ஹென்றிபோர்டு, c. மார்கோனி

8. இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர்?
a. ஜான்ரைட், b.ஆலன் பார்டர், c. விவியன் ரிச்சர்ட்ஸ்

9. ஆஸ்திரேலியாவின் தலைநகர்?
a. மெல்பர்ன், b. சிட்னி, c. சிகாகோ.

10. கபில்தேவ் உடன் விளையாடிய வீரர்?
a. கங்குலி, b. டெண்டுல்கர், c. திராவிட்.

மேலே பத்து கேள்விகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கேள்விக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. இதில் ஒரு விடை சரியானது. சரியான விடைகளைக் கண்டுபிடித்து எழுதி, முகவரி கூப்பனையும் ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். கடைசி தேதி 31.3.2001.

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

மூன்றாவது முறை பட்டம்!


ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டிகள் நடந்து முடிந்துள்ளன. ஜனவரி 28ந் தேதி ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் அமெரிக்காவின் ஆந்த்ரே அகஸ்ஸியும் பிரான்ஸின் ஆர்னாட் கிளெமெண்ட்டும் மோதினர். இறுதியில் 6 - 4, 6 -2, 6 - 2 என்ற செட் கணக்கில் அகஸ்ஸி கிளெமெண்ட்டைத் தோற்கடித்துப் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டார்.



* கேப்ரியாட்டி, ஹிங்கிஸ்


31 வயதாகும் அகஸ்ஸிக்கு மூன்றாவது முறையாக ஆஸ்திரேலிய ஓபன் பட்டம் கிடைத்திருக்கிறது. ஏற்கனவே 1995ஆம் ஆண்டும், கடந்த ஆண்டும் இவர் இப்பட்டத்தை வென்றிருக்கிறார். இவருக்கு இது ஏழாவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும்.

பெண்கள் இறுதி ஒற்றையர் போட்டியில் அமெரிக்காவின் ஜெனிஃபர் கேப்ரியாட்டியும் ஸ்விட்சர்லாந்தின் மார்ட்டினா ஹிங்கிஸும் மோதினர். இதில் கேப்ரியாட்டி 6 - 4, 6 - 3 என்ற செட்களில் ஹிங்கிஸைத் தோற்கடித்தார். 24 வயதாகும் கேப்ரியாட்டி 13 வயது முதல் சர்வதேசப் போட்டிகளில் பங்கு பெற்று வருகிறார். 1992ல் இவர் பார்சிலோனா ஒலிம்பிக்ஸில் தங்கம் வென்றது குறிப்பிடத்தக்கது. 1994ஆம் ஆண்டுக்குப் பிறகு கேப்ரியாட்டி வெல்லும் முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம் இதுதான்.



* அகஸ்ஸி

அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் ஒற்றையர் போட்டியில் கோட்டைவிட்டாலும், சகோதரி செரீனாவுடன் சேர்ந்து இரட்டையர் பட்டத்தை வென்றுவிட்டார். ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் இரட்டையர் பட்டத்தை வென்றதன் மூலம் இந்தச் சகோதரிகள் 4 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களையும் வென்ற ஜோடி என்ற சாதனையைப் படைத்திருக்கின்றனர்.



பொன் ஏட்டில் பொறிக்க வேண்டிய வரிகள்!

அசத்தல் படம்!

✉ கோகுலம் வர, வர கண்ணைப் பறிக்கிறது. அதிலும் ஐந்தாம் பக்கத்தில் புதன் வண்ணப் படம் அசத்திவிட்டது. போஸ்டர் போட்டதை வரவேற்கிறேன். அதில் கிரிக்கெட் வீரர்கள் மட்டுமல்லாமல் இயற்கை காட்சி, பூக்கள், விலங்குகள், பறவைகள் என அபூர்வமான படங்களைப் போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

– எம். நிவேதிதா,
எம். பிரவின், மதுரை.

ஆஹா!

✉ கோகுலத்தில் வண்ண போஸ்டர், ஆஹா! அதுவும் என் மனம் கவர்ந்த அஜித் அகர்கரின் படம். எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது. இது போன்ற போஸ்டர்களை மாதம் தோறும் வெளியிடுங்கள். அடுத்த மாதம் என்ன போஸ்டர்? என் அறை காத்துக் கொண்டிருக்கிறது.

– எஸ். ராஜாராமன்,
பத்தாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப்பள்ளி,
துறையூர்,
திருச்சி மாவட்டம்.

பொன் ஏடு

✉ ஓவியத்தின் மீது ஆர்வம் இல்லாதவர்கள் கூட ஓவியர் ஜெயராஜின் அனுபவங்களைப் பார்த்து ஓவியராகிவிடலாம் போலிருக்கிறது. 'எந்த ஓவியனுக்கும் படிப்பும் இருக்க வேண்டும். அந்தப் படிப்பால் கிடைக்கும் அறிவு, ஒருவனது ஓவியத் திறமையை மேம்படுத்த உதவி செய்யும்' என்ற வரிகள் பொன் ஏட்டில் பொறிக்க வேண்டியவை.

– எஸ். சிராஜுதீன், நாகப்பட்டினம்.

சிநேகம்

✉ குரங்கிலிருந்து மனிதன் தோன்றியதாலோ என்னவோ, எப்போதும் எனக்குக் குரங்குகளைப் பார்க்கும்போது அன்பு ஏற்படும். குறைந்து வரும் கொரில்லாக்கள் கட்டுரையில் போட்டிருந்த கொரில்லா படத்தைப் பார்க்கும் போது சிநேகிதமாக இருந்தது. படம் வரைந்தவருக்குப் பாராட்டுகள்.

– வே. கல்யாணி, எட்டாம் வகுப்பு,
ஏரல், தூத்துக்குடி
மாவட்டம்.

நெகிழ்ச்சி

✉ பறக்கும் பாதக்குறடு கதையைப் படிக்கும்போதே சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்து விட்டது. படமும் அருமை. எங்கள் பள்ளியில் நடந்தது பகுதியில் 'மறக்க முடியாத மனித நேயம்' என்ற தலைப்பில் வெளிவந்த சம்பவம் நெகிழ வைத்தது.

– ஆர். காவ்யா,
சென்னை.

வியப்பு!

✉ உலக சாம்பியன் ஆனந்த் பற்றி விளையாட்டரங்கில் தெரிந்து கொள்ள முடிந்தது. எவ்வளவு பெரிய அரசர் ராஜ ராஜ சோழன்! அவர் பற்றிய, 'செய்தி அனுப்பு ஆள் வரும்' என்ற தகவல் புது விஷயமாகவும் வியப்பாகவும் இருந்தது.

– பி. சந்திரன்,
இருக்காட்டுப்பள்ளி.

காவியத் தலம்!

கல்லும் கவிபாடும் - ஓர்
காவியத் தலமாகும்!
மல்லை எனக்கூறும் - மா
மல்ல புரமாகும்!

துள்ளிக் கரையேறும் - அலை
தொன்மைக் கதைகூறும்!
பள்ளித் தமிழ்ஏடாய் - அது
பல்லவர் புகழ்பாடும்!

சின்னஞ் சிறுவீதி - எங்கும்
சிற்பக் கலைக்கூடம்!
குன்று குகையாவும் - சிலைக்
கொலுவின் எழில் மாடம்!

பண்டை வரலாறு - அடி
பதித்த கடலோரம்
நின்று பெரும்பேறு - பெற்று
நிலைத்த இடமாகும்!

கண்டு திருநாளாய் - பலர்
களிப்பர் தினந்தோறும்!
சென்று வரலாம், வா - இன்பச்
செலவில் ஒருநாள் நாம்!


- தளவை இளங்குமரன்,
செங்கற்பட்டு.



எங்கள் பள்ளியில் நடந்தது

தமிழ் பாடவேளை, ஆசிரியர் முதல் நாள் இலக்கணத்தில் பாலின் வகைகளைப் பற்றி பாடம் நடத்தியிருந்தார். அதிலிருந்து கேள்வி கேட்க ஆரம்பித்தார். "பாலின் வகைகளைக் கூறு" என்ற கேள்வியைக் கேட்டதும், என் நண்பன் வேகமாகக் கைதூக்கினான். ஆசிரியர் அவனையே எழுப்பி பதில் சொல்லச் சொன்னார். சந்தோஷத்துடன் எழுந்தவன் "பாலின் வகைகள் அதிகம். உதாரணமாக, ஆவின் பால், ஆரோக்யா பால், ஹெறிடேஜ் பால்" என்று கூறியவுடன் ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்து விட்டோம். பிறகு வேறொரு மாணவனை எழுப்பி அதே கேள்வியைக் கேட்டார். அவன் "ஆண்பால், பெண்பால், பலர் பால், பலவின் பால்" என்றான். உடனே என் நண்பன் தான் முதல் நாள் பள்ளிக்கு வரவில்லை என்பதைக் கூறி உட்கார்ந்தான்.


-செ. பாலாஜி, ஒன்பதாம் வகுப்பு, புனித வளனார் மேல் நிலைப் பள்ளி, திருவண்ணாமலை.



மவுஸ்?

அன்று பள்ளி திறந்த முதல் நாள். நானும் தோழிகளும் +1 வகுப்பில் நுழைந்தோம். எங்கள் ஆசிரியர் வந்து "உயிரியல், கணிப் பொறி இரண்டு பாடப் பிரிவுகள் முதல் குருப்பில் உள்ளன. இரண்டில் ஏதாவது ஒன்றை நீங்கள் தேர்வு செய்து கொள்ளலாம்" என்றார். இருபது பேர் கணிப் பொறியையும், முப்பதுபேர் உயிரியலையும் தேர்வு செய்தனர். பிறகு ஆசிரியர் "என்னம்மா இதற்குப் பிறகு யாரும் எந்தப் பிரிவுக்கும் மாறமாட்டீர்களே?" என்றார். என் தோழி எழுந்து "டீச்சர் இரண்டில் எது படித்தால் மவுசு?" என்றாள், "கணிப் பொறிக்குத்தான் மவுஸ் உண்டு" என்றார் சிரித்தபடி ஆசிரியர். "டீச்சர் நான் கேட்டது வாய்ப்பு" என்றாள் தோழி. "அதற்கும் அதே பதில்தான்" என்றார் ஆசிரியர்.

- ஏ.எல். ராவியாகனி, காரைக்கால்.



ஏன்?

அன்று எங்களுக்கு முதல் பாடவேளை ஆங்கிலம். ஆசிரியர் வந்து பாடம் நடத்தினார். ஆங்கிலப் பாடவேளை முடிந்தது. இரண்டாம் பாடவேளை சமூக அறிவியல். சமூக அறிவியல் ஆசிரியர் வராததால் ஆங்கில ஆசிரியரே முதல் நாள் நடத்திய சமூக அறிவியல் பாடத்திலிருந்து கேள்வி கேட்க ஆரம்பித்தார். ஒரு மாணவனை எழுப்பி "இரண்டாம் உலகப் போர் எதற்காக நடத்தப்பட்டது?" என்று கேட்டார். அதற்கு அவன் "முதல் உலகப் போர் சரியாக நடக்காததால்தான் இரண்டாம் உலகப் போர் நடைபெற்றது" என்றவுடன்




இருபது ரூபாயில் உலகத்தைச் சுற்றிப் பார்ப்பேன்!

வகுப்பே சிரித்தது. ஆசிரியர் மட்டும் கோபப்பட்டார்.

- ந. துரை, வெள்ளையாம்பட்டு, விழுப்புரம் மாவட்டம்.


சிறு சேமிப்பு



ஒன்பதாம் வகுப்பு படிப்பு முடியும் தருவாய். மாணவர்கள் சஞ்சைகா மூலம் சேகரித்த பணத்தைத் திருப்பிக் கொடுத்துக் கொண்டிருந்தார் ஆசிரியர். பெரும்பாலானவர்கள் நூறு ரூபாய்க்கு மேல் சேமித்திருந்தார்கள். ஒரே ஒரு மாணவி மட்டும் இருபது ரூபாய் சேமித்திருந்தாள். இதைப் பார்த்த ஆசிரியர் "என்னம்மா, சேமிப்புல எல்லோரையும் மிஞ்சிட்டியே. என்ன வாங்கப் போறே?" என்றார். உடனே நாங்கள் சிரித்தோம். அவள் "இதில் நான் உலகத்தையே சுத்திப் பார்க்கப் போறேன் சார்" என்றாள். ஆசிரியர் உட்பட அனைவரும் திகைத்தோம். "நான் உருளை வடிவில் வந்திருக்கிற உலக வரைபடம் வாங்கப் போறேன். அதைச் சுற்றிவிட்டால் சுற்றும்" என்றாளே பார்க்கலாம்!


- ராமகிருஷ்ணன், காயக்காடு.

நாட்டிற்காக...



சரித்திரப் பாடவேளை, ஆசிரியர் இந்திய சுதந்திரத்திற்காகப் பாடு பட்ட பெரியோர்களைப் பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார். பல படங்களைக் காட்டி "இவர்கள் எல்லாம் நாட்டிற்காக உழைத்து தங்கள் இன்னுயிரை ஈந்தவர்கள்" என்று கூறி நிறுத்தினார். உடனே கலாராணி என்ற மாணவி எழுந்து "நாட்டிற்காக உழைத்தால் இறந்துட வாங்கன்னு சொல்றீங்களா சார்?" என்றாள். நாங்கள் சிரிக்க ஆசிரியரோ "அப்படியில்லம்மா. தங்கள் உயிரைக்கூட பொருட்படுத்தாமல் நாட்டைக் காப்பாற்றிய அவர்களின் தியாகத்தைத்தான் நாம் பின்பற்ற வேண்டும். இப்படி எடுத்துக்கக்கூடாது" என்றார்.

- வி. ஆர். கிருத்திகா, திருச்சி



அலுமினியத்தின் பயன்?

அறிவியல் பாடவேளை. ஆசிரியர் உலோகங்களைப் பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது "அலுமினியத்தின் பயன்கள் என்னென்ன?" என்று பொதுவாகக் கேட்டார். ஒரு மாணவி வேகமாக எழுந்து "அலுமினியத்தைக் கடையில் போட்டு பேரீச்சம் பழம் வாங்கலாம்" என்றாளே பார்க்கலாம்! உடனே ஆசிரியர் "எப்பவும் சாப்பிடறதிலேயே இருக்கே போலிருக்கு. அதான் பேரீச்சம் பழம் ஞாபகம் வந்திருக்கு" என்றார் கோபத்துடன், அவள் மன்னிப்புக் கேட்டு உட்கார்ந்தாள்.

- சி.வி. பத்மஜா, பதினோராம் வகுப்பு, அரசினர் மேல் நிலைப்பள்ளி, ஆண்டிபட்டி.

அழகன், செங்கல், குமரன்!

10 அழகன் கிடைத்தான்!

செந்தில் மூளைக்குள் மின்னல்! முனையில் தங்க நூல் சுற்றிய சுருட்டுத் துண்டை முன்பு மலை உச்சியில் பார்த்திருக்கிறான்! அந்த மூன்று சதிகாரர்களில் ஒருவனுக்கு இந்தப் பழக்கம் உள்ளது. ஆக, அவர்கள்தான் அழகனையும் கடத்தியிருக்கிறார்கள்! ஆனால் அவன் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தபோது, மூவரும் எங்கேயோ பாம் வெடிக்கப் போவதாக அல்லவா பேசிக் கொண்டிருந்தார்கள்... அதற்குள், எதற்காக இந்தக் கடத்தல்? பணம்! ஆம். தப்பித்துத் தலைமறைவாக



வாழத் தேவையான பணம்!

சதிகாரர்கள் எப்போது, எங்கே வெடிப்பார்கள்? அதற்குள் அழகனை மீட்டு வந்துவிட வேண்டும்...

சுந்தரம் கவலையுடன் காத்திருந்தார். இருபது லட்சம் பணம் நாளைக் காலை ஏற்பாடு செய்து விடுவார். கடத்தல்காரர்கள் இத்துடன் நிறுத்திக் கொள்வார்களா? இது கடைசி போன் கால் என்றானே...

பூஜை அறையை விட்டு வெளியே வராத மனைவியின் நிலை சுந்தரத்தை உருக்கியது.



உள்ளே வந்த பாண்டியனின் முகம் இறுகியிருந்தது.

"மாறு வேடத்தில் ஆட்கள் தேடிக் கிட்டிருக்காங்க சார். இதுவரை உருப்படியா எதுவும் தகவல் வரலை. சந்தேகம் தராத சாதாரண குடியிருப்பு வீடு எதிலோ அவனுங்க பதுங்கி இருக்கணும்."

"சரிதான். இந்த போன்கால்ல அப்படித் தான் சொல்லியிருக்கான்."

டேப்பை இயக்கினார். "எங்களுக்கு இன்னும் இருபது லட்சம் வேணும்!" என்று சதிகாரன் குரல் கேட்டது.

இருபது லட்சமா என்று பாண்டியன் வாய் பிளந்தார். முழுவதும் கேட்டு முடித் ததும் ஏமாற்றமாக உணர்ந்தார். 'க்ளூ' எது வுமே சிக்கவில்லை. அடுத்து என்ன செய்வது? திசை தெரியாமல் அவர் தவித்துக் கொண்டிருந்தபோது செந்தில் உள்ளே வந்தான்.

"அங்கிள்! அங்கிள்! கடத்தினவங்களைக் கண்டுபிடிச்சுட்டேன்!" என்றான் பரபரப்

பத்மா ரவிசங்கர்

பாக.

"இவன் செந்தில்! அழகனோட க்ளோஸ் ஃப்ரெண்டு. ரொம்ப சாமர்த்தியசாலி!" என்று பாண்டியனிடம் அறிமுகம் செய்த சுந்தரம், செந்திலை நோக்கி, "என்னப்பா சொல்றே?" என்றார்.

"நான் அவங்களைப் பார்த்திருக்கேன் மொத்தம் மூணு பேர்!"

"நிமிர்ந்து உட்கார்ந்த இன்ஸ்பெக்டர் "விளக்கமாகச் சொல்லு!" என்றார்.

செந்தில் விவரித்தான். மலையில் பார்த்த ஒட்டுத் தாடிக்காரன், அவன் கூட்டாளிகள், சுருட்டுத் தடயம், காத்திருக்கும் பாம் சதி என்று ஒன்று விடாமல் சொன்னான்.

"பிரச்னை சீரியஸா இருக்கு சார். கடத்தல் கும்பல் தீவிரவாதிகளாகத் தான் இருக்கும்" என்று இன்ஸ்பெக்டர் கவலையுடன் புலம்பினார்.

"சார்! நான் உங்களுக்கு உதவ முடியும். எதையும், எவரையும் ஒருமுறை பார்த்தாலே போதும். அப்படியே என்னால வரைய முடியும் சார்! அந்த கிரிமினல்கள் முகம் இன்னமும் என் மனசுல இருக்கு" என்றான் உற்சாகமாக.

> **"எவரையும் ஒருமுறை பார்த்தாலே போதும். அப்படியே என்னால வரைய முடியும்"**

ஒரு கூரிய கூரிய பென்சில், சில வெள்ளைத் தாள்கள். அனாயாசமாக விளையாடும் செந்தில் விரல்கள். சுந்தரமும் பாண்டியனும் வியப்புடன் பார்த்தனர்.

இரண்டே நிமிடங்கள். முதலில் அந்தத் தாடிக்காரனின் உருவம் தோன்றியது. சுந்தரம் யோசனையுடன் பார்த்தார். "இவனை எங்கேயோ பார்த்திருக்கேன்..."

அடுத்து, ஒட்டுத் தாடி அகற்றிவிட்டு அவன் உருவத்தைச் செந்தில் வரையவும், துள்ளினார் சுந்தரம்!

"இவன் சந்திரன்! என் தொழிற்சாலைல வேலை பார்த்தவன்! அங்கே இவன் சில திருட்டுத்தனங்கள் செய்து மாட்டிக்கிட்டு, ஆறு மாசம் முன்னே டிஸ்மிஸ் ஆனவன்!"

வெள்ளைத் தாளில் மீதமிருந்த இரண்டு சதிகாரர்கள் முகம் வந்ததும், பாண்டியனின் முகம் பிரகாசமாகியது.

"இவனுங்க ரெண்டு பேரும் தீவிரவாதிகள்! போலீஸ் ரெகார்டுல பதிவாகி இருக்கு. இதுவரைக்கும் போலீஸுக்கு டிமிக்கி குடுத்தவங்க! ஒருத்தன் பேரு வயிரவன். பாம் செய்யறதுல கில்லாடி. அடுத்தவன் பேரு தங்கராசு; துப்பாக்கிச் சுடறதுல எக்ஸ்பர்ட்" என்றவர் செந்திலின் கை பற்றிக் குலுக்கிவிட்டு, "உன் வரையற திறமை அற்புதம்பா!" என்றார்.

"இப்ப எல்லாம் தெளிவாப் புரியுது பாண்டியன்! என்னைப் பழி வாங்கவே என் மகனைக் கடத்தியிருக்கான்! பணம் பறிக்க தீவிரவாதிகள் துணை நாடியிருக்கான் அந்த ராஸ்கல்!"

"பாம் மேட்டரை மறந்துட்டீங்களே!"

"ஆமாம்! அதை எங்கே வைப்பாங்க?"


"இன்னுமா புரியலை? தொழிலாளர்களைத் துரத்தி விட்டுட்டு, உங்களைத் தொழிற்சாலைக்கு வந்து அழகனை மீட்டுட்டுப் போகச் சொல்றாங்க. அவனுங்க டார்கெட், உங்க ஃபாக்டரிதான்!"

"மை காட்!" என்று அதிர்ந்தார் சுந்தரம்.

பதிவு செய்யப்பட்ட கடத்தல்காரனின் டெலிபோன் பேச்சைத் திரும்பவும் போட்டுக் கேட்கத் தொடங்கினர். செந்திலும் உற்றுக் கவனித்தான். அவனுக்குள் ஏதோ நெருடியது! ஏதோ ஒரு பழகிய விஷயம் தட்டுப்பட்டது. என்ன அது...

"சார்! இந்த டேப்பை ஆம்ப்ளிஃபயர் உள்ள ம்யூசிக் சிஸ்டமில் போட முடியுமா?" என்றான் செந்தில் பரபரப்பாக.

"அடடே! எனக்கு இது தோணாமப் போச்சே!" என்றார் இன்ஸ்பெக்



டர்.

பெட்ருமின் பெரிய ஸ்டீரியோ சிஸ்டத்தில் டேப்பைப் போட்டு ஆன் செய்தார் சுந்தரம்.

தற்போது சதிகாரனின் போன் பேச்சு உரத்துக் கேட்டது. சிறிது நேரத்தில் பேச்சின் நடுவில் கூடவே இன்னொரு ஒலியும் இப்போது கேட்டது! டடங்! டடங்! செந்தில் மகிழ்ச்சியில் துள்ளினான். அது, ஊர் சிவன் கோவில் மணியோசை! தினமும் அதிகாலையில் இந்த ஒலியைக் கேட்டுத்தானே செந்தில் கண் விழிக்கிறான்...

"கிரேட்!" என்று பாராட்டிய பாண்டியன் செந்திலைத் தழுவிக் கொண்டார். "இனி ஈஸி! அந்தக் கோவிலுக்கு அருகே தான் அவர்கள் இருக்கணும். மஃப்டியில் தேடச் சொல்றேன்."

"ஏதோ ஒண்ணு எனக்கு நெடுநாள் பழகின மாதிரி இருக்கு!"

மறுநாள் காலை. உற்சாகமாக வந்த இன்ஸ்பெக்டர் கையில் ஒரு வாக்டாக்கி. "சிவன் கோவிலுக்கு அடுத்த தெருவுல அந்த வீடு இருக்கு. அதன் வாசல்ல அந்தச் சுருட்டுத் துண்டுகள் கிடக்கு! ஆனா அழகன் அங்கே இல்லை! அந்த வீட்டுக்குள்ள ஒருத்தன்தான் இருக்கான்!"

"அவனைப் பிடிச்சு உலுக்கினோம்னா, தகவல்கள் கிடைச்சுறாதா?" என்று கேட்டார் சுந்தரம்.

"அப்படி செய்யக் கூடாது. மீதி ரெண்டு கடத்தல்காரங்க உஷாராகி அழகனை எதுவும் செய்துடுவாங்க. அதனால... எந்தச்





"போருக்குப் போகும்போது இளவரசர் எதுக்குத் தேங்காய் எண்ணெய், சீப்பு எல்லாம் எடுத்துக்கிட்டுப் போறார்?"

"போரில் பத்து தலையாவது சீவணும்னு மன்னர் சொன்னாராம்!"

– மா. மகேஷ்ப்ரியன்

சந்தேகமும் வராதபடி... அவனுங்க சொன்ன படியே நடந்துக்குங்க. ஈவினிங் அழகனை விடுவிக்கும்போது, வளைச்சு மூணு பேரையும் பிடிச்சுடலாம்!"

மாலை ஐந்து மணிக்கு சவுக்குத் தோப்பில் பணப்பெட்டியை வைத்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினார் சுந்தரம்.

பணப்பெட்டியை எடுத்துக்கொண்ட தங்கராசு, உல்லாசமாக நடந்தான். முண்டாசு கட்டி விவசாயி வேஷத்தில் இருந்த ஒரு போலீஸ் ஆசாமி வெகு தொலைவிலிருந்து தங்கராசைப் பின் பற்றத் தொடங்கினார். அரைமணி கழித்து தங்கராசு தன் வயர்லஸ்செட்டில் 'பணம் கிடைத்து விட்டது!' என்று வயிரவனுக்கு சிக்னல் கொடுத்தான்.

சுந்தரம் வீடு. இன்ஸ்பெக்டர் புதிய தகவல்களுடன் வந்தார்.

"சார்! ஃபாக்டரியில அழகன் இப்ப காத்துக்கிட்டிருக்கான். சந்திரன், தங்கராசை போலீஸ் அரெஸ்ட் பண்ணிருச்சு. தங்கராசு திடுக்கிடும் தகவல் ஒண்ணு சொல்லியிருக்கான்! அழகன் உடம்புல ஒரு பவர்ஃபுல் பாம் கட்டி வெச்சு அனுப்பி இருக்காங்களாம்! அதை வெடிக்க வைக்கற விசை வயிரவன்கிட்ட இருக்காம்!"

சுந்தரம் அதிர்ச்சியில் உறைந்துபோய் நின்றார். செந்தில் பீதியில் ஆழ்ந்தான்.

"உங்களையும், அழகனையும், ஃபாக்டரியையும் ஒரு சேர அழிக்கிறதுதான் அவனுங்க நோக்கம். வயிரவன் ஒரு கிளைச் சாலைல உங்க வரவுக்காக இப்ப காத்துக்கிட்டிருக்கான்! அவனை நாங்க நெருங்கிப் போய்ப் பிடிக்க முடியாது! போலீஸ் தலையைப் பார்த்தாலே ரிமோட்டை அழுத்தி பாமை வெடிக்கச் செய்துருவான்! என்ன செய்றதுன்னே புரியலையே!" என்றார் பாண்டியன் பரிதாபமாக. டென்ஷனாக சில நிமிடங்கள் சென்றது.

"சார்! எனக்கு ஒரு ஐடியா தோணுது! அந்த வயிரவனுக்கு எந்தச் சந்தேகமும் வராது!" என்று செந்தில் சொல்லத் தொடங்கினான்.

வயிரவன் காத்திருந்தான். தொலைவிலிருந்த தொழிற்சாலையைப் பார்த்தான். சற்று முன்னர்தான் அழகனை ஃபாக்டரிக்குள் அனுப்பி வைத்திருந்தான்.

சுந்தரம் அரைமணியில் வந்து விடுவார். ஃபாக்டரிக்குள் நுழைந்ததும், ரிமோட்டின் சிவப்பு பொத்தானை அமுக்கினால்... எல்லாம் க்ளோஸ்! சுற்றிலும் கண்களால் நோட்டமிட்டான் வயிரவன். எங்குமே போலீஸ் தலை தென்படவில்லை. திருப்தியுடன் ரிலாக்ஸானான். கார் பானட் மீது அந்த ரிமோட்டை வைத்தான். கார் மீது ஒய்யாரமாகச் சாய்ந்து நின்றான். தெரு நாய் ஒன்று சாலையினுள் நுழைவதை அசுவாரசியமாகப் பார்த்தான். சாக்கடையை நாய் முகர்வதைப் பார்த்து முகம் சுளித்தான். நாய் நிமிர்ந்தது. வயிரவனைப் பார்த்தது. அவனை நோக்கி வந்தது.

வயிரவனை நெருங்கியதும் நின்றது. வேகமாக வாலை ஆட்டியது.

"வீணா வாலை ஆட்டாதே! என்கிட்ட பிஸ்கட் ஏதும் இல்லியே! பாம் இருக்கு! வேணுமா?" என்று வயிரவன் கிண்டலாகச் சிரித்தான்.

அந்த நாய் திடுமென்று கார் பானட்டின் மீது பாய்ந்து, அந்த ரிமோட்டை லாவகமாகக் கவ்விக் கொண்டது! அவ்வளவுதான். நாலு கால் பாய்ச்சலில் பாயத் தொடங்கிய அந்த நாய்–

குமரன்!

அது இட்டுச் சென்ற திசையில் மிகப் பதட்டத்துடன் பின் தொடர்ந்து ஓடினான் வயிரவன். ஒரு நிமிட முடிவில், ஒரு பக்க வாட்டுத் திருப்பத்திலிருந்து திடுமென்று தோன்றிய ஒரு போலீஸ் படை வயிரவனை வளைத்துக்கொண்டது.


மறுநாள் முன் இரவு. அலங்கரிக்கப்பட்ட சுந்தரம் இல்லம் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது! அங்கே, சுந்தரம் மற்றும் தியாகராஜன் குடும்பத்தினர் குழுமியிருந்தனர். பிரதானமாக அருகருகே –


அழகன், செந்தில், குமரன்!

விருந்து தொடங்கியது...

(முற்றும்)

குறுக்கெழுத்துப் புதிர்!





இடமிருந்து வலம்

1. செல்வம், ஆசைகளைத் துறந்தவர் (3)

5. உலோகங்களில் ஒன்று. பாத்திரம் செய்யப்பயன்படுகிறது (4)

6. இது இல்லாதவர் கண்ணில்லாதவரே (3)

7. பிரணவ மந்திரம் (2)

9. அந்தக் காலத்து காங்கிரஸ்காரர்கள் இந்த உடைகளையே அணிவர் (3)

12. கிராமங்களில் குறி சொல்லும்போது பயன்படுத்தப்படும் சத்தம் எழுப்பும் கருவி (4)

13. நவரத்தினங்களில் ஒன்று. இதன் நிறம் பச்சை (5)

வலமிருந்து இடம்

3. பார் விளையாடுவது, சிங்கத்தின் கூண்டுக்குள் செல்வது போன்ற நிகழ்ச்சிகள் இதில் இடம் பெறும் (5)

8. புனித நதி (3)

10. கண்ணனின் தீவிர பக்தை (2)

11. குதிரை (3)

15. கொக்கரகோ எனக் கூவுவது ______ (3)

மேலிருந்து கீழ்

1. யானைக்கு இது கைகள் போன்று செயல்படும் (5)

2. தலையில் சொம்பு வைத்து ஆடும் கிராமத்து நடனம் (4)

3. வளையம் உடையக் கோள் (2)

4. எலி, நண்டு முதலியவை இதைத் தோண்டி வாழ்கின்றன (2)

12. 100 லட்சம் என்பது ______ (2)

கீழிருந்து மேல்

13. வீடு கட்டப் பயன்படும் இடம் (2)

14. இசைக்கருவிகளில் ஒன்று (4)

15. பெரிய புராணத்தை இயற்றியவர் (5)

— கோ. செந்தமிழ்ச் செல்வி,
பத்தாம் வகுப்பு,
சோ.க.க.வி.
மேல்நிலைப்பள்ளி,
காஞ்சிபுரம்.

கேட்கட்டுமா டாக்டர்?


● ம. தினகரன்,
சேலம்.

? ஒருவருடைய இரத்த அழுத்தத்தை மருத்துவர்கள் எவ்வாறு அளக்கிறார்கள்?

! இரத்தம், இரத்த நாளங்கள் வழியாகச் செல்லும் போது, நாளங்களின் சுவர்மீது ஒரு குறிப்பிட்ட அளவில் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. இதுவே 'இரத்த அழுத்தம்' (Blood Pressure) என்று அழைக்கப்படுகிறது. இதயம் சுருங்கும்போது இரத்த அழுத்தம் அதிகமாகவும், இதயம் விரியும்போது இரத்த அழுத்தம் குறைவாகவும் இருக்கும்.

ஒருவருடைய இரத்த அழுத்தம் 120/80 மி.மீ. பாதரச அளவாக இருக்க வேண்டும். இதுவே 'இயல்பு இரத்த அழுத்தம்' என எடுத்துக் கொள்ளப்படுகிறது. இவற்றில் 120 என்பது சுருங்கழுத்தம்; 80 என்பது விரிவழுத்தம்.

இரத்த அழுத்தமானி (Sphygmomanometer) எனும் கருவியின் மூலமும் ஸ்டெத்தாஸ்கோப் கருவியின் துணையுடனும் இரத்த அழுத்தம் அளக்கப்படு



இரத்த அழுத்தத்தை எவ்வாறு அளக்கிறார்கள்?

கிறது. கி.பி.1880ல் வியன்னா நாட்டு மருத்துவர் சாமுவேல் வான் பாச் (Samuel Von Basch) இரத்த அழுத்தமானிக் கருவியைக் கண்டுபிடித்தார். இவர் இரத்த அழுத்தத்தில் ஒரு வகை தான் உள்ளது என்று கூறினார். பின்னர் 1905-ஆம் ஆண்டில் ரஷ்ய மருத்துவர் நிக்கோலை கோரட்கோஃப் (Nicolai Korotcoff) இரத்த அழுத்தமானியையும் ஸ்டெத்தாஸ்கோப்பையும் கொண்டு இருவகை இரத்த அழுத்தங்களை அளக்கும் முறையைக் கண்டறிந்தார். இதுவே தற்போது நடைமுறையில் உள்ளது.

இரத்த அழுத்தமானிக்கருவியில் இரத்த அழுத்தத்தைக் காண்பிக்கும் பாதரசம் (Mercury) நிரப்பப்பட்ட குழாய்; அகன்ற இரப்பர் பையை உள்ளடக்கியத் துணிப் பட்டை; இரப்பர் பைக்குள் காற்றை நிரப்பத் தேவையான இரப்பர் பந்து முதலியன உள்ளன.

இக்கருவியிலுள்ள துணிப்பட்டையை முழங்கைக்கு மேலே இறுக்கமாகக் கட்டி, அதற்குக் கீழே முழங்கையின் முன்புறத்தில் ஸ்டெத்தாஸ்கோப்பை வைத்து, இரப்பர் பந்தை அழுத்தி, துணிப்பட்டைக்குள் உள்ள இரப்பர் பைக்குள் காற்றைச் செலுத்தி, அதனுள் காற்

ரழுத்தத்தை அதிகப்படுத்த வேண்டும். அப்பொழுது இரத்த அழுத்தமானியில் பாதரசம் கொஞ்சம் கொஞ்சமாக மேலேறிச் சென்று அழுத்தத்தின் அளவைக் காண்பிக்கும். ஒரு குறிப்பிட்ட அழுத்தத்தில் துணிப்பட்டை தமனிநாளத்தை அழுத்தி, இரத்த ஓட்டத்தைத் தடைசெய்யும். இதனால் இரத்த ஓட்ட ஒலி கேட்காது. இப்பொழுது இரப்பர் பந்திலிருந்து காற்றை சிறிது சிறிதாக விடுவித்து இரப்பர் பையின் காற்றழுத்தத்தைக் குறைத்துக் கொண்டே வரவேண்டும். ஒரு குறிப்பிட்ட அளவு அழுத்தத்தில் இரத்த ஓட்ட ஒலி கேட்கத்துவங்கும். இது இதயம் சுருங்கும் பொழுது தோற்றுவிக்கப்படும் அதிகபட்ச அளவாகும். இது 'சுருங்கழுத்தம்' என (Systolic Pressure) அழைக்கப்படுகிறது.



காற்றழுத்தத்தைக் குறைத்துக் கொண்டே வரும்பொழுது, இரத்த ஓட்ட ஒலிகள் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கும். இந்த ஒலிகள் 'கோரட்கோஃப் ஒலிகள்' (Korotcoff Sounds)என்று அழைக்கப்படுகின்றன. பின்பு, இந்த ஒலிகளின் அளவு குறைந்து கொண்டே வந்து, ஒரு அழுத்த நிலையில் ஒலி கேட்பது முழுமையாக நின்றுவிடும். இது இதயம் விரியும்பொழுது தோற்றுவிக்கப்படும் குறைந்த பட்ச அழுத்தமாகும். இது 'விரிவழுத்தம்' என (Diastolic Pressure) அழைக்கப்படுகிறது.

இரத்த அழுத்தத்தை அளக்க தற்பொழுது பல்வேறு வகைப்பட்ட கருவிகள் வந்துள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் செயல்பட்டு இரத்த அழுத்தத்தை அளக்க உதவுகின்றன.

● ஒ.சே. அறிவழகன், திருப்புலிவனம்

? நிமோனியா காய்ச்சல் என்றால் என்ன? எதனால் ஏற்படுகிறது? அறிகுறிகள் என்ன? என்ன சிகிச்சை? எப்படி தடுப்பது?

! நுரையீரல்களில் பாக்டீரியா, வைரஸ் ஆகிய கிருமிகள் புகுந்து அழற்சியை உண்டாக்கும்போது வருகின்ற காய்ச்சலுக்கு 'நிமோனியா காய்ச்சல்' (Pneumonia Fever) என்று பெயர். ஸ்ட்ரெப்டோ காக்கஸ் நிமோனியே, ஸ்டெபெலோகாக்கஸ் ஆரியஸ், மைக்கோபிளாஸ்மா, கிளப்சியல்லா, சியூடோமோனஸ் ஆகிய பாக்டீரியாக்களும், இன்ஃப்ளுயன்சா, வேரிசெல்லா, மீசில்ஸ் ஆகிய வைரஸ் கிருமிகளும் நோயாளிகளின் மூச்சுக் காற்றிலிருந்தும், சளியிலிருந்தும் வெளியேறி, மற்றவர்களின் நுரையீரல்களை அடைந்து, நுரையீரல் திசுக்களை அரித்துப் புண்ணாக்கி, அழற்சியைத் தோற்றுவிக்கின்றன. இதனால் நிமோனியா காய்ச்சல் ஏற்படுகிறது. நெஞ்சுச்சளி, இருமல், காய்ச்சல், நெஞ்சுவலி, மூச்சுத்திணறல், சளியில் ரத்தம் ஆகியவை இந்த நோயின் முக்கியமான அறிகுறிகள். பசிக்குறைவு, உடல்வலி, தலைவலி போன்ற இதர அறிகுறிகளும் ஏற்படும். மருத்துவப் பரிசோதனை, ரத்தப் பரிசோதனை மற்றும் மார்பு எக்ஸ்ரே மூலம் இந்த நோயை உறுதி செய்ய இயலும். தகுந்த நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளையும், வலி நிவாரணிகளையும் பத்து நாட்களுக்குத் தொடர்ந்து எடுத்துக் கொண்டால் நோய் குணமாகி விடும். இந்த நோயைத் தடுக்க நாம் அனைவரும் சுய சுத்தம் மற்றும் சுற்றுப்புற சுகாதாரம் காக்க வேண்டும். நோயாளிகள் இருமும் போது முகத்தைக் கைக்குட்டையால் மறைத்துக் கொள்ள வேண்டும். தெருக்களிலும் பொது இடங்களிலும் சளியைத் துப்பக் கூடாது. சளியை ஒரு குவளையில் சேகரித்து, எரித்து, மண்ணில் புதைத்துவிட வேண்டும். ஈக்கள் மொய்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.


டாக்டர் கு. கணேசன்

ஆடம்பர வாழ்க்கை!

டி. ஜானகி

மலையனூர் மன்னர் உத்தமவர்மன் ஆட்சி பீடத்தில் அமர்ந்ததும் நல்லவராகத்தான் இருந்தார். நல்ல முறையில் ஆட்சி நடத்தி வந்தார். ஆனால் சில வருடங்களில் தீய நண்பர்களின் சகவாசத்தால் ஆடம்பர வாழ்க்கையில் மோகம் கொண்டார். கஜானாவிலிருந்து பணத்தை எடுத்துத் தன் விருப்பம்போல செலவழிக்கலானார். இதனால் தேய்பிறை நிலா போன்று கருவூலத்தில் நாளுக்கு நாள் செல்வம் குறைந்து கொண்டே வந்தது. எனவே, மன்னர் நாட்டின் நிலவரியை உயர்த்தினார்.

ஆனால்... கடலில் கரைத்த பெருங்காயம் போன்று மன்னரின் ஆடம்பரச் செலவுகளுக்கு இந்த வருமானம் போதவில்லை. மேற்கொண்டு வருமானத்திற்கு என்னவழி என்று யோசித்த போது மன்னரின் கவனம் காட்டின் மீது சென்றது. அவ்வளவுதான்! காட்டிலிருந்த



மரங்களை வெட்டி விற்றுப் பணம் சம்பாதிக்கலானார்.

நாளுக்கு நாள் காட்டில் மரங்களின் எண்ணிக்கை குறையலாயிற்று. ஒரு நாட்டின் செல்வமான காடு அழிக்கப்பட ஆரம்பித்தால் நாட்டிற்கு ஏற்படும் அபாயத்தை உணர்ந்த மந்திரி மதியூகி மிகவும் கவலை கொண்டார். பிடிவாத குணம் கொண்ட மன்னர் தன் புத்தி மதிகளைச் செவி மடுத்துக்கூட கேட்க மாட்டார் என்று அவருக்குத் தெரியும். என்ன செய்வது என்று தெரியாமல் கவலையும் வேதனையும் படலானார்.

மேலும் ஒரு மாதம் ஓடியது.

அன்று மன்னர் திடீரென்று மந்திரியைக் கூப்பிட்டு, "நாளை நாம் இருவரும் மாறுவேஷத்தில் நகரைச் சுற்றிப் பார்க்கப் போகிறோம்" என்று கூறினார்.

"அரசே! என்ன இப்படி திடீரென்று?.." மந்திரி வார்த்தையை முடிக்கவில்லை.

"நகரைச் சுற்றிப் பார்த்து பல மாதங்கள் ஆகிவிட்டன. அதனால்தான் இந்த முடிவு" என்று படாரென்று பதில் சொன்ன மன்னரை வியப்புடன் பார்த்தார் மந்திரி.

மறுநாள் காலையிலேயே மன்னரும், மந்திரியும் ஏழை விவசாயிகள் போல் வேடம் அணிந்து நகரைச் சுற்றி வலம் வந்தனர். மன்னரின் ஆடம்பர வாழ்க்கையைச் சிலர் போற்றியும் பலர் தூற்றியும்



பேசியதை மன்னரும் மந்திரியும் காதாரக் கேட்டனர். இதனால் மன்னர் பாதிக்கப் பட்டவராகத் தெரியவில்லை.

கடுமையான வெய்யில். வியர்வையில் குளித்தபடி இருவரும் நகர்ப்புற எல்லைக்கு அருகில் இருந்த பெரிய வேப்ப மரத்துக்குக் கீழே இருந்த திண்ணையில் அமர்ந்து கொண்டனர். அதில் இன்னும் இரண்டு மூன்று பேர் அமர்ந்திருந்தனர். இரண்டு சிறுவர்கள் வேப்ப மரத்தடியைச் சுற்றி விளையாடிக் கொண்டிருந்தனர்.

மாறுவேடத்தில் இருந்த மந்திரி குடிக்க நீர்வேண்டும் என்று கேட்கவே 'அப்பு' என்பவர் நீர் கொண்டுவர அருகில் இருந்த தன் வீட்டிற்குள் சென்றார்.

அப்போது- திண்ணையில் முன்பே அமர்ந்திருந்த முதியவர் விளையாடிக் கொண்டிருந்த இரண்டு சிறுவர்களையும் பார்த்து, "திண்ணைப் பள்ளிக்கூடத்துக் குப் போய் உங்க இரண்டு பேரையும் படிக்கச் சொன்னேன் இல்லே, படிக்காம ஏன் இப்படி விளையாடிக்கிட்டு இருக் கிங்க?" என்று கேட்டார்.

"பெரியவரே! எங்கப்பா தான் உனக் குப் படிப்பு வேண்டாம்னு சொல்லிட் டாரு" என்றான் ஒருவன்.

"நீ இனிமே வேலைக்குப் போ. அப்படின்னு சொல்லிட்டாரு" என்றான் மற்றொருவன்.

அந்தச் சமயம் அந்தச் சிறுவர்களின் தந்தையான அப்பு இரண்டு சொம்புகளில் தண்ணீரோடு அங்கு வந்து மன்னருக்கு ஒன்றும் மந்திரிக்கு ஒன்றும் கொடுத்தார். இருவரும் நீர் அருந்தினர்.

"அப்பு! இப்படி என் பக்கத்திலே வந்து உட்காரு. உன் மகன்கள் இரண்டு பேரும் சொல்றது உண்மையா?"- பெரியவர் வினவினார்.

"ஆம் பெரியவரே! இவங்க ரெண்டு பேரையும் வேலைக்கு அனுப்ப முடிவு செய்துட்டேன்" என்று பதில் சொன்னார் அப்பு.

"இப்ப இவங்க இரண்டு பேருக்கும் கல்வி கற்றுக் கொள்ள வேண்டிய வயசு. இந்தச் சிறுவர்களை படிக்க அனுப்பாமல் வேலைக்கு அனுப்ப நினைக்கறதுக்கு என்ன காரணம்?"

"பெரியவரே! இவங்க இரண்டு பேரும் சம்பாதிச்சா எனக்குப் பணம் கிடைக்கும். தாராளமா செலவு செய்யலாம். நம் மன்னர் மாதிரி ஆடம் பரமாக வாழலாம் இல்லையா?"



இதைக்கேட்ட பெரியவர் சற்றே உரத்த குரலில் கூறலா னார்:

"அப்பு! நம் குழந்தை களுக்கு இளமையில் கல்விச் செல்வத்தைக் கொடுக்க வேண்டியது நமது கடமை. பிற்கால வாழ்க்கை வளமாக அமைய கல்விச் செல் வம் ரொம்ப அவசியம். இன்னிக்கு உனக்குப் பணம் காசு கிடைக் கிறது என்பதற்காக உன் மகன்களோட பிற்கால வாழ்க்கை யைப் பாழாக்கலாமா?

இது எப்படி இருக்கு தெரியுமா? நம் மன்னர் நம் நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி எண்ணாமல், இன்று தான் ஆடம் பரமாக வாழ்வதற்காக நம் நாட்டின் செல்வமான காட்டை அழித்துக் கொண்டு வரும் முட்டாள் தனத்திற்கு ஒப்பானது.''

"பெரியவரே! நீங்கள் என்ன... சொல்... கிறீர்கள்?"

"என்ன சொல்றேனா... நாம உழைத்து வசதியாக வாழ நினைப்பது தப்பில்லே. ஆனால் மற்றவங்க சொத்திலே ஆடம் பரமாக வாழ நினைப்பது தவறு. நம் மோட முன்னோர்கள் போட்ட விதைகள், ஊன்றிய மரக்கன்றுகள்தான் இன்று பல ஆயிரக்கணக்கான மரங்களாக வளர்ந்திருக்கு. காட்டு மரங்களை யாருமே வெட்டாததாலே காடும் பசுமையா இருந்தது. நாடும் செழுமையா இருந்தது. நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி ஆராயாமல் மன்னர், பரம்பரைச் சொத் தான மரங்களை வெட்டிக் குவிக்கிறார்.''

அருகில் இருந்த இன்னொருவர் தொடர்ந்தார் : "அப்பு! நம் ராஜா இருக் கும் செல்வத்தை எல்லாம் அழித்துக் கொண்டே வந்தால் வரக் கூடிய தலை முறைக்கு என்ன சொத்து இருக்கும்? இப் படி மரங்களைத் தொடர்ந்து வெட்டிக் கொண்டே இருந்தால் என்ன ஆகும் தெரியுமா? நாட்டிலே மழை பெய்யாது. விளைச்சல் குறையும்... பசியும் பட்டினியும் தலை விரித்தாடும். காட்டு விலங்குகள் எல்லாம் நாட்டிற்குள் வரும்'' என்றார்.

இப்பொழுது பெரியவர் மீண்டும் தொடர்ந்தார் : ''அப்பு! உன்னோட அப்பா உன்னை நாலெழுத்துப் படிக்க வச்சிருக்கார். நீயும் அரசாங்கத்திலே வேலை பார்க்கறே. இன்றைக்கு ராஜா வோட ஒரு வயது மகன் நாளைக்கே பெரியவனாக வளர்ந்ததும் நிச்சயம் தன் தந்தையைப் பார்த்து, ''தங்களுக்கு கிடைத்த பொது சொத்தான காட்டை, நாட்டின் மக்களுக்குக் கூட கொடுக்காமல் தங்கள் ஆடம்பர வாழ்க்கையில் அழித்து விட்டீர்கள். என் ஆட்சி காலத்தில் பஞ்சத்தாலும், வறட்சியாலும், நானும் மக்களும் அவதிப்படுகிறோம். தாங்கள் செய்தது நியாயமா?'' என்று கேட்பார். அதேபோல பிற்காலத்தில் உன் பையன் களும், "உரிய பருவத்தில் கல்வி கற்க விடாமல் ஆடம்பர வாழ்க்கைக்காக எங் களைச் சம்பாதிக்கச் சொன்னது நியா யமா?ன்னு கேட்பாங்க. அப்ப என்ன பதில் சொல்லப்போறே?'' என்று நிறுத்தினார்.

சில நொடிகள் யாரும் பேசவில்லை. முதலில் அப்பு தான் வாயைத் திறந்து பேசலானார் : "பெரியவரே! யோசித்துப் பார்த்ததில் தங்கள் கூற்றில் இருக்கும் உண்மையும் நியாயமும் புரிந்தன. நாளையிலிருந்து என் மகன்களைத் திண்ணைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிப் படிக்க வைக்கிறேன்''– என்றார்.

ஆனால்... மன்னரோ...இன்னும் அப்படியே சிலைபோன்று அமர்ந்திருந் தார். பெரியவர் கேட்டது கன்னத் திலேயே பளார், பளார் என்று அடிப்பது போல இருந்தது. தன் தவறு அவருக்குப் புரிந்தது. தீய நண்பர்களை நாட்டை விட்டே துரத்தினார். ஆடம்பர வாழ்க் கையை விட்டுவிட்டார். தான் செய்த தவறுகளுக்குப் பிராயச்சித்தமாக நாட்டி லும் காட்டிலும் நிறைய மரக்கன்றுகளை நட ஏற்பாடு செய்தார். மன்னர் திருந்தி யதைக் கண்ட மக்கள் மகிழ்ச்சி அடைந் தனர். ஏன் மந்திரியும் கூடத்தான்!

தான் சொல்லிக் கொடுத்தபடி பேசி நடித்த பெரியவர், அப்பு, அவருடைய இரண்டு பையன்களைப் பார்த்து மந்திரி நன்றி தெரிவித்தார்.

''திருடன்கிட்டே பீரோ சாவியைக் கொடுக்கும்போது, எதுக்காக 'சல்யூட்' அடிச்சீங்க?''

''மரியாதையா பீரோ சாவியைக் கொடுத்திடுன்னு சொல்லிக் கத்தியைக் காட்டினானே...!''


- கலை நண்பன்




கோகுலம்
போஸ்டர்



பச்சைக் கூரைக்கு ஒற்றைத் தூண் - அது என்ன?



I. 1. தண்ணீர் இல்லாமல் வளரும், தரையில்லாமல் படரும் - அது என்ன?

2. சின்னத்தம்பி, சிவப்புத் தம்பி, திறந்த வாய் மூடாத நல்லதம்பி - அவன் யார்?

3. ஒரு சாண் குள்ளனுக்கு குடுமி மட்டும் அரை சாண். - அது என்ன?

4. காய்ந்த மரத்தில் கல் எடுத்துப் போட்டேன். காவல்காரப் பையன் கோபப்பட்டு வந்தான். - அவன் யார்?

5. மரத்துக்கு மரம் தாவுவான் குரங்கு அல்ல. பட்டை அடித்திருப்பான் சாமியார் அல்ல. - அது என்ன?

7. செடியில் விளையாத பஞ்சு. தறியில் நூற்காத நூல். கையில் தொடாத துணி - அது என்ன?

- அண்ணா அன்பழகன், அந்தணப்பேட்டை.

II. 1. தாழ்ப்பாள் இல்லாத கதவு, தானாக மூடித் திறக்கும் கதவு - அது என்ன?

2. பச்சைக் கூரைக்கு ஒற்றைத் தூண், பழசாய்ப் போனபின் பத்துத் தூண் - அது என்ன?

3. ஈட்டிகள் பாதுகாப்பில் இளவரசி, தலையில் அமர தப்பி வருவாள் - அவள் யார்?

4. இணைந்தே இருக்கும் இருவர் இடையில் எவர் வந்தாலும் பிரிக்கப்படு கிறது - அது என்ன?

— கவிதா, திருநெல்வேலி.


III. 1. காலையில் வந்த விருந்தாளி மாலையானதும் மறைந்திட்டான் - அவன் யார்?

2. போவான் வருவான் கறுத்தப்பன், தலைகீழாய் நிற்பான் கறுத்தப்பன் - அது என்ன?

3. பூட்டுச்சாவி இல்லாத சிறுபெட்டி; காசு

கொடுத்து வாங்கும் பெட்டி - அது என்ன பெட்டி?

4. வெள்ளை வெள்ளைச் சீமாட்டிக்கு விளக்கு எரியுது தலைக்கு மேலே - அது என்ன?



5. தலையை வெட்ட வெட்ட கறுப்பு நாக்கை நீட்டுது - அது என்ன?

6. குட்டையான அழகிக்கு நெட்டையான ஜடை - அது என்ன?

— சத்யா,
பதினோராம் வகுப்பு,
அரசினர் பெண்கள்
மேல்நிலைப் பள்ளி,
ஆண்டிபட்டி.

IV. 1. முள்ளுக் கோட்டைக்குள் முத்து குவியல்கள் - அது என்ன?

2. வெளிச்சத்தில் பிடிபட்டவன் இருளிலே வருகிறான் - அவன் யார்?

3. ஆள் ஏறாத மலையில் ஆயிரம் பூப்பூத்திருக்கு - அது என்ன?

4. யாருமில்லாத இடத்தில் எங்கண்ணன் குடை பிடிக்கிறார் - அது என்ன?

5. கடிவாளம் போட்டால் காலிலே கிடக்கும் - அது என்ன?

— கண்ணதாசன்,
ஆறாம் வகுப்பு, ராஜ்வித்யாலயா
மெட்ரிகுலேசன் பள்ளி,
குற்றாலம்.

விடைகள்

I. 1. தலைமுடி 2. தபால் பெட்டி 3. தேங்காய் 4. தேனீ 5. அணில் 6. சிலந்தி வலை

II. 1. இமை 2. ஆலமரம், விழுதுகள் 3. ரோஜா 4. கத்தரிக்கோல்

III. 1. சூரியன் 2. வெளவால் 3. தீப்பெட்டி, 4. மெழுகுவர்த்தி 5. பென்சில் 6. கத்தரிக்காய்

IV. 1. பலாப்பழம் 2. புகைப்படம் 3. நட்சத்திரம் 4. காளான் 5. செருப்பு

கொசுவும் சிங்கமும்

ஒரு கொசு சிங்கத்திடம் பறந்து சென்று பேசத் தொடங்கிற்று. ''நீ என்னைவிடப் பலசாலி என்று எண்ணிக் கொண்டிருக்கிறாய் அல்லவா? அது மிகவும் தவறு. உன் வலிமை எப்படிப்பட்டது? பற்களைக் கடித்துக் கொண்டு கால்களின் நகங்களால் பிறாண்டுகிறாய். சரி வா, நாம் இருவரும் சண்டை போட்டுப் பார்ப்போம்'' என்றது.

உடனே அது 'ஙொய்' என்று சங்கநாதம் செய்துகொண்டு, சிங்கத்தின் மீது பாய்ந்து, அதன் மூக்கிலும் தாடையிலும் கடிக்கத்



தொடங்கியது. சிங்கம் தன் நகங்களால் முகத்தைப் பிறாண்டியும், தட்டியும் தோலைக் கிழித்துக் கொண்டதில் இரத்தம் வடிந்தவுடன் அது களைத்தும் போயிற்று.

வெற்றி ஒலி கிளப்பிக்கொண்டு கொசு பறந்து ஓடிவிட்டது. ஆனால் சிறிது நேரத்திற்குள்ளாகவே அது ஒரு சிலந்தியின் வலையில் சிக்கிக் கொள்ள நேர்ந்தது. சிலந்தி அதன் இரத்தத்தை உறிஞ்சத் தொடங்கிற்று.

'மிருகங்களில் அதிக வல்லமையுள்ள சிங்கத்தை வென்றவன் நான்; ஆனால் இப்பொழுது ஓர் அற்பச் சிலந்தி என்னை வதைத்துக் கொண்டிருக்கிறதே' என்று கொசு எண்ணிற்று.

கருத்து: டால்ஸ்டாய் கதைகள்.


— டி.எஸ். பாலு,
சென்னை-41.

பிருந்தாவனம்


நைஜீரியாவில் உள்ள யூபோர்பியா மெஸ்மாண்ட் என்னும் செடியை ஊரின் எல்லையிலும், நிலத்திற்கு வேலியாகவும் அதிகமாக வைத்திருக்கிறார்கள். இந்தச் செடியை வெட்டிவிட்டு, யாரும் எல்லையைத் தாண்ட முடியாது. ஏனென்றால், இச்செடியை வெட்டினால் அதன் தண்டில் இருந்து ஒரு திரவம் பீச்சியடிக்கும். நச்சுத் தன்மை வாய்ந்த அந்தத் திரவம் உடலில் பட்டதும் அந்த இடங்களில் கொப்புளங்கள் உண்டாகித் தாங்க முடியாத எரிச்சலை ஏற்படுத்தும்!

மணிக்கு எழுபது கிலோ மீட்டர் வரை சுறாமீன் தண்ணீரில் பாய்ந்து செல்ல முடியும். சுறாமீன்களின் உடலில் காற்றுப் பைகள் எதுவும் இல்லை. அதனால் தண்ணீரில் மிதக்க முடியாது. நீந்திக் கொண்டே இருக்க வேண்டும். நீந்தாமல் இருந்தால் தண்ணீரில் மூழ்கி விடும்.

- பா. வடிவேல், தேவனாங்குறிச்சி




சீன மக்கள் 'ஏழைகளின் மருந்து' என்று பூண்டைக் குறிப்பிடுகிறார்கள். பூண்டிலிருந்து அலிஸாட்டின் என்னும் மருந்து தயாரிக்கப்படுகிறது. பூண்டில் வைட்டமின் பி. சி என்னும் ஊட்டச் சத்துகள் அதிக அளவில் உள்ளன. அயோடின், சுண்ணாம்புச் சத்து, பொட்டாசியம், பாஸ்பரஸ் ஆகியவையும் கணிசமாக உள்ளன.




நாய்க்குச்


உலகின் மிகப் பெரிய கிறிஸ்துவ ஆலயம், புனித பீட்டர் பேராலயம். இந்த ஆலயம் ரோமாபுரியில் வாட்டிகன் நகரில் அமைந்துள்ளது. சிலுவையின் வடிவமைப்பில் இந்த ஆலயம் கட்டப்பட்டுள்ளது. கி.பி. 325-ல் பேரரசர் கான்ஸ்டென்டைன் என்பவரின் உதவியால் கட்டப்பட்டது. 1506-ம் ஆண்டில், இரண்டாம் ஜூலியஸ் என்ற போப் ஆண்டவரால் திருத்தியமைக்கப் பட்டது.

- கி.கு. கார்த்திகேயன், திருச்செங்கோடு.





சிலை!




அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையோரப் பகுதியில் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு ஒருவகை அமெரிக்க இந்தியர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் தங்கள் அரசனை இன்கா என அழைத்தனர். ஆகையால் இவர்களுக்கு இன்கா மக்கள் எனப் பெயர் ஏற்பட்டது.

- க. துர்கா காத்யாயனி, ஒன்பதாம் வகுப்பு, புனித அலாய்சியஸ் மகளிர் மேல் நிலைப் பள்ளி, தூத்துக்குடி.

மனித உடலில் ஓடும் இரத்தத்தை A, B, AB, O என நான்கு வகையாகப் பிரித்திருக்கிறார்கள். இன்ன வகை இரத்தம் உடையவருக்கு இன்ன வகை இரத்தந்தான் செலுத்தப்படலாம் என்று உள்ளது. ஒரு வகை இரத்தம் உடையவருக்கு, அதே வகை இரத்தம் உடையவர் இரத்தம் அளிக்கலாம். இதுதவிர, AB வகை இரத்தம் உடையவருக்கு AB வகை இரத்தத்துடன் மற்ற மூன்று O, A, B இரத்தமும் சேரும். A வகை இரத்தம் உடையவருக்கு A வகை இரத்தம் அல்லது O வகை இரத்தம் அளிக்கப்படலாம். அதே போல் B வகை இரத்தம் உடையவருக்கு B வகை இரத்தமோ O வகை இரத்தமோ செலுத்தலாம். O வகை இரத்தம் உடையவருக்கு O வகை இரத்தம் மட்டுமே செலுத்தப்படல் வேண்டும்.


க. சௌம்யாயனி, ஏழாம் வகுப்பு, புனித அலாய்சியஸ் ம.மே.நி.பள்ளி, தூத்துக்குடி.




பிரான்சில் பான் டெஸ்டோர்ப் என்னும் இடத்தில் அமைந்துள்ள குகையில் ஒரு நீர் ஊற்று உள்ளது. அந்த ஊற்றில் நீர் சுரப்பது அதிசயமாய் உள்ளது. அந்த ஊற்றில் 36 நிமிடம் 36 நொடிகள் நீர் ஊறும், அடுத்த 32 நிமிடம் 30 நொடிகள் நீர் சுரக்காது. பிறகு 36 நிமிடம் 36 நொடிகள் நீர் ஊறும்; அடுத்த 32 நிமிடம் 30 நொடிகள் நீர் சுரக்காது. இப்படியாக மாறி மாறி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நீர் ஊறிக் கொண்டிருக்கிறது.

- க. பூங்கொடி, சித்தோடு

ஜப்பானைச் சேர்ந்த டாக்டர் வினோ என்பவருடைய நாய்க்கு ஷிபூகா ரயில் நிலையத்திற்கு முன்னால் ஒரு சிலை எழுப்பியிருக்கிறார்கள். ஹோஷிகோ என்ற அந்த நாய் ஒவ்வொரு நாள் காலையிலும் தன் எஜமானருடன் ரயில் நிலையத்துக்கு வந்து அவரை வழியனுப்பி வைக்கும். மாலையில் அவர் திரும்பி வரும் போது வரவேற்க வரும்.



பிருந்தாவனம்



ஒரு நாள் டாக்டர் திரும்பி வரவில்லை. போன இடத்தில் அவர் இறந்து விட்டார். ஆயினும் அவருடைய நாய் காலை யிலும் மாலையிலும் 11 வருடங்கள் வந்து போய்க் கொண்டிருந்தது. பின்னர் அது இறந்துவிட்டது. அதை அந்த நாயின் எஜ மானரின் கல்லறை அருகி லேயே புதைத்ததுடன் மக்கள் அதற்குச் சிலையும் அமைத்து விட்டார்கள்.

- ஜி.கே. மூர்த்தி, ஈரோடு.

பூமியின் மொத்தப் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு பசிபிக் பெருங்கடலாகும். பசிபிக் என்ற சொல்லுக்கு 'அமைதி' என்று பொருள். இப்பெருங்கடல் அமைதி யானது என்பதால் பசிபிக் பெருங்கடல் என்று பெயரிட் டுள்ளனர். அமைதியான இப் பெருங்கடலில் உலகிலுள்ள எரிமலைகளுள் 80% அமைந்துள்ளது. இதனால் இப் பெருங்கடலில் அடிக்கடி நில நடுக்கம் ஏற்படுகிறது.

- நெ. இராமன், சென்னை.

பூட்டுகளில் சாவியில்லாத பூட்டு ஒன்று உள்ளது. இதைக் காந்தப் பூட்டு என்பர். இதில் சாவிக்கான துளை இருக்காது. அதற்குப் பதிலாக பக்கவாட்டில் பின்னமான பகுதி இருக்கும். அந்த இடத்தில் அதற்கான ஒரு உலோகத் துண்டை வைத்து இழுத்தால்தான் பூட்டு திறக்கும். பூட்ட வேண்டுமானால், அந்தத் துண்டின் அவசியம்கூட இல்லை. பூட்ட வேண்டிய மேல் கம்பியைப் பூட்டுத் துளைக்கு நேராகக் கொண்டு வந்தால் போதும். தானே இழுத்துக் கொண்டு பூட்டிக் கொள்ளும்.

- ஏ.எல்.ராவியாகனி, காரைக்கால்.


கோல்ஃப் விளையாட்டில் பந்தை எவ்வளவு தூரம் சரியான கோட்டில் அடிக்கிறோம் என்பது தான் முக்கியம். பந்தில் சிறு சிறு பள்ளங்கள் இருப்பதால் பந்து நேராகக் குறிப்பிட்ட இலக்கு நோக்கிக் காற்றின் எதிர்ப் பைக் குறைத்துப் போகிறது.

மிகுந்த பலமுள்ள சிறந்த கோல்ஃப் வீரர் 275 மீட்டர் தூரம் பந்தை அடிக்க முடியும். ஆனால் 180 மீட்டர் முதல் 230 மீட்டர் வரை அடிப்பதே மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகிறது. கோல்ஃப் பந்தின் எடை 45.9 கிராம். குறுக்கு வெட்டு நீளம் 4.11 செ.மீ.

- ஆர்.ஏ. செந்தில் ஆனந்தி, செட்டிபாளையம்.

பிக் பென் என்பது பிரபலமான ஒரு கடிகாரம். இது லண்டன் பார்லிமெண்ட் கட்டடத்தின் மீது உள் ளது. 329 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கால் மணிக்கு ஒரு தடவை நேரத்தைக் குறிக்க ஓசை எழுப்பு வதற்கு 8000 கிலோ எடை கொண்ட மிகப் பெரிய மணிகள் நான்கு இருக்கின்றன. மணி அடிக்கும் நாக்கு 13 அடி நீளமும் 2225 கிலோ எடையும் கொண்டது. நிமிட முள்ளின் நீளம் 14 அடி. கடிகார உச்சிக் குப் போக 292 படிகள் ஏறிச்செல்லவேண்டும்.

- ஆர்.ஆர். பூபதி, திண்டுக்கல்.







புதிர் உலகம்

I கறுப்பனுக்கு 2 பிள்ளைகள். மூக்கன், காத்தான் என்று பெயர். மூவரும் தச்சு வேலை செய்பவர்கள். கறுப்பனும் மூக்கனும் சேர்ந்து போனால் ஒரு நாளைக்கு பத்து ரூபாய் சம்பாதிப்பார்கள். கறுப்பனும் காத்தானும் சேர்ந்து போனால் ஒரு நாளைக்கு 9 ரூபாய் கூலி கிடைக்கும். மூக்கனும் காத்தானும் மட்டும் போனால் ஒரு நாள் கூலி 7 ரூபாய்தான்! அப்படியானால் ஒவ்வொருவருடைய தினக்கூலி என்ன?

– ஆர். சுமதி,
நாமகிரிப்பேட்டை.

II ஒரு வீட்டு வாசலில் மூன்று ஸ்விட்சுகள் உள்ளன. வீட்டினுள் ஒரு விளக்கு உள்ளது. மூன்று சுவிட்சுகளில் ஒவ்வொன்றை ஒருமுறை மட்டுமே பயன்படுத்த வேண்டும். வாசல் கதவையும் ஒரு முறை மட்டுமே திறந்து மூட வேண்டும். இந்த விதிகளைப் பயன்படுத்தி வீட்டினுள் உள்ள விளக்கை எரிய வைப்பது எந்த ஸ்விட்ச் எனக் கண்டுபிடியுங்கள் பார்ப்போம்?

– நா. ஷயாம் சுந்தர்,
சேதுபதி மேல்நிலைப் பள்ளி,
மதுரை-1.


III எங்கள் பள்ளியில் மொத்தம் நூறு பேர். புயல் நிவாரண நிதிக்குப் பணம் சேர்த்தோம். தொடக்கப் பள்ளி மாணவர்கள் 25 பைசாவும் நடுநிலை மாணவர்கள் ரூ. 2ம் உயர்நிலை மாணவர்கள் ரூ. 3ம் உண்டியலில் போட்டார்கள். மொத்தம் ரூ. நூறு கிடைத்தது எனில் எத்தனை தொடக்கப் பள்ளி, நடுநிலை, உயர்நிலைப் பள்ளி மாணவர்கள்?

– வர. அருண்குமார், ஒன்பதாம் வகுப்பு, சேது மாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை, இராமநாதபுரம் மாவட்டம்.

IV மரகதத்தின் தந்தையின் வயது மரகதத்தின் வயதைப் போல் மூன்று பங்கு. மரகதம், அவளுடைய தந்தையின் வயதின் மொத்த எண்ணிக்கை 56 வயது. மரகதம், அவளுடைய தந்தையின் வயது எவ்வளவு என்று சொல்லுங்கள்?

– பா. கவிதா, புதுதில்லி.

V 1 லிருந்து 9 வரையிலான எண்களை மையத்தில் ஒன்றும் விட்டங்களது முனைகளில் ஏனையவும் வரும்படி எழுதி, ஒவ்வொரு விட்டத்தின் கூட்டுத் தொகையும் 15 வர வேண்டும்.



– எம். வீரலட்சுமி,
பதினோராம் வகுப்பு 'அ',
அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி, ஆண்டிபட்டி.

விடை 56ம் பக்கம்

7 ஆளப்பிறந்தவன்!

கதை: ராஜி   படம்: லலிதா




நில் அப்படியே! ஓர் அடி முன்னேறினாலும் உயிருக்கு ஆபத்து.
இந்தக் காட்டில் எனக்குக் கட்டளை இடுவது யார்?
உன் அரசன் ஜெயசிம்மன்தான் கட்டளை இடுகிறேன்.
ஹா! ஹா! சுண்டெலியே எனக்கு நீயா அரசன்? யாரங்கே? அந்தப் பொடியனைக் கட்டிக் கொண்டு வாருங்கள்.
என்னை நெருங்காதீர்கள். எச்சரிக்கிறேன். என் அருகே வந்தால் இக்காட்டில் உள்ள பிசாசுகள் உங்களை...



பிசாசாம் பிசாசு! பூச்சாண்டியா காட்டுகிறாய்? உன் பிசாசுகள் என்னை என்ன செய்யும் பார்ப்போம். ஹா! ஹா!
இதோ பார் பிசாசுகளை.
ஐயோ! பிசாசு தலைகள் மட்டும் தனியாக... ஓ...ஆ....
வீரசிம்மன் ஆட்கள் திரும்பி ஓடினர்.
ஏன் இப்படி ஓடுகிறீர்கள்? நில்லுங்கள்...



ஆ... ஐயோ! நிஜமாகவே பிசாசுகள் தான் போலிருக்கிறது. வெள்ளை உருவங்கள்.
நல்ல வேடிக்கை. வீரசிம்மன் குதிரை எப்படி ஓடுகிறது! சோமு உன் திட்டம் வெற்றி. எப்படி தோன்றியது இந்த யோசனை?
நாம் அரிசி மாவு அபிஷேகம் செய்து கொண்டோமே! அதிலிருந்து தோன்றியது.
நம் கிராம நண்பர்களை அரிசி மாவைத் தலையில் கொட்டி, கூட்டி வந்தேன்.
வெள்ளைக் காகிதங்களில் விகாரமான படங்களை வரைந்து பறக்க விட்டதும் சோமுவின் யோசனைதான்!
உங்களைப் போன்ற நண்பர்கள் இருக்கும் வரை எத்தனை வீரசிம்மன்களையும் சமாளிப்பேன். உங்களுக்கு நாளை அரண்மனையில் விருந்து.
(தொடரும்)

பறக்கும் வெள்ளை யானை!

பஞ்சநாதம் என்கிற பஞ்சுவுக்குப் புத்தி சாலித்தனம் போதாது. ஆனால் மிகவும் நல்லவன். சூதுவாது கிடையாது. நல்ல உழைப்பாளி. அவனிடம் பரம்பரை சொத்தாக காணி நிலம் இருந்தது. அதை நன்கு உழுது, எருப்போட்டு தினைவிதைத்திருந்தான். ஆற்றங்கரையோரம் இருந்ததால் அமோகமாக விளைந்தது.



தேவலோகத்திலிருந்து பறந்து வந்த வெள்ளை யானை தினையின் மணம் கண்டு வயிராற மேய்ந்தது. தூரத்திலிருந்து இதைப் பார்த்த பஞ்சு அதை விரட்ட ஓடி வந்தான். யானை பறந்தது. பஞ்சுவின் கையில் அகப்பட்டது யானையின் வால்தான். யானையோடு பஞ்சுவும் பறந்தான்.

தேவலோகத்தில் போய்தான் யானை நின்றது. பஞ்சுவும் வாலை விட்டான். அங்கிருந்த தேவர்கள், "அடே, மானிடனே! உடலோடு இங்கு எப்படி வந்தாய்? உனக்கு என்ன வேண்டும்?" என்று விசாரித்தனர்.

"நான் உங்கள் தலைவனைப் பார்த்து நியாயம் கேட்க வேண்டும். என்னை அங்கே அழைத்துச் செல்லுங்கள்'' என்றான் பஞ்சு.

தேவர்கள் பஞ்சுவை இந்திரனிடம் அழைத்துச் சென்றனர்.

"யார் நீ? உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான் தேவேந்திரன்.

"உங்களுடைய வெள்ளை யானை என்னுடைய காணி நிலத்தில் பயிரிட்டிருந்த தினையை மேய்ந்து விட்டது. அதன் வால் தான் அகப்பட்டது. அதைப் பிடித்துக் கொண்டுதான் வந்தேன். என் பெயர் பஞ்சு. ஏழை விவசாயி. வருஷம் பூராவும் நான் சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவேன்?" என்று அழுதான். அழுகையினூடே,

"யானை வளர்க்கணுமின்னு ஆசைப் பட்டா தீனிச் செலவு ஆகத்தான் செய்யும். அதுக்காக பூலோகம் அனுப்பிடறதா? நீங்கள் ஜம்முனு யானை சவாரி பண்ண நானா தீனி போட முடியும். நஷ்ட ஈடு வாங்காம நகரமாட்டேன்" என்று தரையில் உட்கார்ந்து கொண்டான்.

இந்திரனும் பஞ்சு கள்ளங்கபடமற்றவன் என்பதைப் புரிந்து கொண்டான்.

"இவனுக்கு ஒரு மரக்கால் பொற்காசுகள் கொடுத்து பூலோகத்தில் விட்டு வாருங்கள்" என்று உத்தரவிட்டான்.

ஆர். பொன்னம்மாள்


தங்க முட்டையோடு வீட்டிற்கு வந்தான் பஞ்சு. பஞ்சுவிற்குத் தங்கத்தின் மதிப்பு தெரியவில்லை. ஒரு வராகனை எடுத்துக் கொண்டு தட்டான் தங்கராசுவிடம் போனான்.

தங்கராசு தங்கத்தை உரைத்துப் பார்த்ததும் அசந்து போனான். 24 காரட் சொக்கத் தங்கம். "ஏது இது?" என்று கேட்டான். நடந்ததைக் கூறினான் பஞ்சு.

பஞ்சுவின் அப்பாவித்தனத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான் தங்கராசு.

"பஞ்சு எதிலேயும் நல்லது, கெட்டது உண்டு. நீ வீட்டிற்குப் போய் எல்லாவற்றையும்கொண்டுவா. நான் தங்க வராகனைப்





பிரிச்சுத் தருகிறேன்'' என்றான்.

பஞ்சு தங்க மூட்டையைக் கொண்டு வந்தான். தங்கராசு அவனை ஒரு மரத்தடிக்குக் கூட்டிச் சென்றான். கீழே செங்குத்தான பாறை. மரம் பாறையை ஒட்டி இருந்தது. பவுன் மூட்டையோடு மரத்திலேறிய தங்கராசு, "பஞ்சு, நான் இங்கேயிருந்து மூட்டையைக் கவிழ்க்கிறேன். பாறையில் தங்குபவை தங்கக் காசுகள். பாறையிலிருந்து உருண்டு விழுபவை சாதாரண காசுகள். சாதாரண காசுகள் எனக்கு. தரம் பிரித்துக் கொடுத்ததற்கான கூலி. சரிதானா?" என்று கேட்டான்.

பஞ்சு சந்தோஷமாய் சம்மதித்தான். தங்கராசு தங்கக் காசு மூட்டையைக் கவிழ்க்க காசுகள் நாலாபுறமும் உருண்டோடின.

"பார்த்தியா! பாறை எப்படிக் கீழே தள்ளுகிறது! இதை ஒருத்தர்கிட்டேயும் சொல்லாதே! பொறாமைப்படுவார்கள்'' என்றபடி கீழே இறங்கி வந்து மண்ணில் விழுந்த காசுகளைப் பொறுக்கி மூட்டை கட்டினான் தங்கராசு. கல்லின் மீது பத்து காசுகளே இருந்தன. அவற்றையும் தங்கராசுவிடமே கொடுத்து பணம் வாங்கிக் கொண்டு போனான் பஞ்சு.

தங்கராசு ஒரு நகைக் கடை வைத்து செழிப்பாக வாழ்ந்தான். பஞ்சு அடுத்த வருடம் நிலத்தை உழுது மீண்டும் தினை பயிரிட்டான்.


"இம்முறை வெள்ளை யானை வந்தால் என்னைக் கூப்பிடு. நானும் உன்னோடு தேவலோகம் வருகிறேன். இந்திரன் உன்னை ஏமாற்றாமல் தங்க வராகனாகவே தரச் சொல்கிறேன். ஆளுக்குப் பாதியாப் பிரித்துக் கொள்வோம். நஷ்ட ஈட்டை அதிகமாகக் கேட்போம்'' என்றான் தங்கராசு.

தினை முற்றியதும் பஞ்சுவுடன் காவல் இருந்தான் தங்கராசு. தங்கம் கிடைப்பதென்றால் சும்மாவா? வெள்ளை யானை வந்து மேய்ந்தது. சிறிது நேரத்தில் பறக்கத் தொடங்கியது. தங்கராசுவுக்கு வால் எட்டவில்லை. அதனால் பஞ்சுவின் கால்களைப் பிடித்துக் கொண்டான். மூவரும் வானில் பறந்த காட்சியை அநேகர் பார்த்தனர்.

தங்கராசு மகிழ்ச்சியுடன், "பஞ்சு, சொர்க்கத்திலே உனக்குத் தங்கம் அளந்த மரக்கால் நாம அரிசி அளக்கறதை விடப் பெரிசா?'' என்று கேட்டான்.

"ஆமாம்' என்றான் பஞ்சு.

"எத்தனை பெரிசு?'' என்று தங்கராசு கேட்க, யானையின் வாலைப் பிடித்திருப்பதை மறந்து "இத்தனை'' என்று இரண்டு கைகளையும் அகல விரித்துக் காட்டினான் பஞ்சு.



தங்கராசு விழுந்தது கரடுமுரடான நிலம். அதனால் தங்கராசுக்கு கால், கை ஒடிந்தது. அவன் மேல் விழுந்ததால் பஞ்சுவுக்கு லேசான காயம் தான்.



உங்கள் நூலகம்

நன்னெறிகளை வலியுறுத்தும் கதைகள்!

• **பாப்பா பாப்பா கதை கேளு, முதல் தொகுதி, அப்பாஸ் மந்திரி, பக் 92, ரூ.35, குட்புக்ஸ் பப்ளி கேஷன்ஸ், பிளாக் நம்பர் ஏ.ஏ. 96- பிள்ளையார் கோவில் எதிரில், அண்ணா நகர் – சென்னை - 600040**

குழந்தைகளுக்காக நிறைய எழுதியுள்ள ஓர் எழுத்தாளரின் 29 சிறு கதைகளின் தொகுப்பு. பாப்பாக்களுக்கு என்ன கதை சொல்வது என்று தெரியாமல் திண்டாடும் பெற்றோர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நூல். படங்கள் கதைகளுக்குச் சுவை கூட்டுகின்றன. எளிய நடை. பெரிய எழுத்தில் இருப்பதால் குழந்தைகள் தாங்களே எழுத்துக் கூட்டிப் படிக்கவும் செய்யலாம்.

• **கைவினைப் பொருள்கள் தயாரிக்கப் பயன்படும் டிசைன்கள், ரமணி ரங்கநாதன், பக்.64, ரூ.30, மணிமேகலைப் பிரசுரம், 4 தணிகாசலம் தெரு, தி.நகர், சென்னை 600 017.**

சுவர் சித்திரங்கள், திரைச் சீலைகள் போன்றவற்றைத் தயார் செய்யும்போது தேவைப் படும் சித்திரங்கள் அடங்கிய புத்தகம். சித்திரங்கள், மிக அழகாக துணி, பீங்கான், சுவர் என்று எதில் வேண்டுமானாலும் டிரேஸ் செய்து கொள்ள வசதியாக அமைந்துள்ளன. நூல் விளக்கங்கள் மிகத் தெளிவாக உள்ளன. ஓவியப் பிரியர்களுக்கும் புதிதாக ஓவியம் பயில வருவோருக்கும் ஏற்ற பயனுள்ள புத்தகம்.

• **அறிவூட்டும் விலங்குக் கதைகள், பாலமுருகன், பக்.120, ரூ 25, குறிஞ்சி – 20, ஏ– ஆசிரியர் குடியிருப்பு, ராஜாஜி நகர் விரிவு, வில்லிவாக்கம் – சென்னை 600 049.**

மனிதர்களுக்கு என்னவெல்லாம் பண்புகள் தேவைப்படுகிறதோ அவையெல்லாம் விலங்குகளுக்கும் தேவைப் படுவதாகக் கற்பனை செய்து விலங்குகளுக்கென ஓர் கற்பனை உலகையே உருவாக்கி, கதைகளில் விலங்குகளை இயக்கி நன்னெறிகளையெல்லாம் வலியுறுத்திக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

• **இராமகிருஷ்ண பரமஹம்சர், எம்.வி. வெங்கட்ராம், பக். 60, ரூ.15, பழனியப்பா பிரதர்ஸ், 14 பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை, சென்னை 600 014.**

பக்தி, தொண்டு இரண்டினாலும் இறைவனைக் காண முடியும் என்பதை உலகுக்கு உணர்த்திய இந்திய ஞானியார் பரமஹம்சரின் வாழ்க்கை. மிகப் பெரிய தத்துவங்களையும் சிறிய கதைகள் வாயிலாகப் பாமரரையும் உணர வைத்து உயர்த்திய மகானின் வரலாறு. சிறுவரும் கூட எளிதில் படித்துச் சுவைக்கும் படி எழுதப்பட்டுள்ளது. நீண்ட காலத்திற்குப் பிறகு மீண்டும் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

• **மௌனத்தின் வெற்றி, ஜானகி மணாளன், பக் 96, ரூ.18 கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை 600 017.**

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக மிகச் சிறப்பாக சிறுவர் இலக்கியத்தின் எல்லாப் பிரிவுகளையும் செழுமைப் படுத்தி வரும் படைப்பாளியின் 16 குட்டிக் கதைகள் அடங்கிய சிறுகதைக் கொத்து. எல்லாமே ஏதாவது அவசியமான ஒரு பண்பை வலியுறுத்துகின்றன.ஓவியங்கள் மெருகூட்டுகின்றன. தரமான தயாரிப்பு.

— ரே

புதிர் உலக விடைகள்!



I கறுப்பனும் காத்தானும் சேர்ந்து வேலை செய்வதைவிட கறுப்பனும் மூக்கனும் சேர்ந்து வேலை செய்யும்போது ஒரு ரூபாய் அதிகம் கிடைத்தது. எனவே, மூக்கன் காத்தானைவிட 1 ரூபாய் அதிகம் பெறுகிறான். ஆகவே மூக்கனுக்குக் கூலி - 4, காத்தானுக்கு 3, கறுப்பனுக்கு - 6 ரூபாய்.


II முதலில் முதல் ஸ்விட்சைப் போட வேண்டும். ஐந்து நிமிடம் இடைவெளிக்கு பின் முதல் ஸ்விட்சை அணைத்துவிட்டு இரண்டாம் ஸ்விட்சைப் போட வேண்டும். பின் கதவைத் திறந்து உள்ளே சென்று விளக்கைப் பார்க்க வேண்டும். விளக்கு எரிந்தால் இரண்டாம் ஸ்விட்ச்; விளக்கைத் தொட்டுப் பார்த்து அது சூடாக இருந்தால் முதல் ஸ்விட்ச், சூடாகவும் இல்லை, விளக்கும் எரியவில்லையென்றால் மூன்றாம் ஸ்விட்ச்.

III

தொடக்கப்பள்ளி	72 x 0.25	= ரூ 18
நடுநிலை பள்ளி	2 x 2	= ரூ 4
உயர்நிலை	26 x 3	= ரூ 78
	100 பேர்	= ரூ100

IV மரகதம் வயது - 14
மரகதத்தின் தந்தை வயது - 42.


V ஒவ்வொரு விட்டத்தின் கூட்டுத் தொகையும் 15 வரும்.



குறுக்கெழுத்துப் புதிர் விடை!

1 து	ற	வி	■	ஸ்	2 க	க்	ர்	3 ச
ம்	■	■	4 வ	■	ர	■	■	னி
5 பி	த்	த	ளை	■	6 க	ல்	வி	■
க்	■	■	■	7 ஓ	ம்	■	■	■
கை	ங்	8 க	■	■	■	9 க	த	ர்
■	■	■	ரா	10 மீ	■	■	■	ழா
■	வி	ர	11 பு	■	12 கோ	டா	ங்	கி
ளை	■	■	ம்	■	டி	■	■	க்
13 ம	ர	க	14 த	ம்	■	ல்	வ	15 சே

ஆஹா, என்ன வாசனை!



'நெய் வாசனை மூக்கைத் துளைக்கிறதே! என்ன பலாப்பழம், கொய்யாப்பழம் வாங்கினீர்களா? மல்லிகைச் செடியின் பூ வாசனை தெருவையே அசத்துகிறது...' இப்படிப்பட்ட உரையாடல்களின் கதாநாயகன் யார் தெரியுமா? முகத்தில் மையமாய் இருக்கும் திருவாளர் மூக்குதான்... இப்படிப்பட்ட வாசனைகள் மட்டுமல்ல, மோப்ப சக்தியை வழங்குவதும் மூக்குதான். விலங்குகள் தோன்றியதிலிருந்தே, அவற்றின் உயிர் வாழ்தலைத் தக்க வைத்தவை மூக்கும், நாக்கும்தான். மூக்கும், நாக்கும் நெருங்கிய சொந்தக்காரர்கள். அனைத்து விஷயங்களிலும் மூக்கும், நாக்கும் ஒற்றுமையாக செயல்படுகின்றன. நாக்கின் மேல் உணவுப் பொருளை வைத்தால்தான், அதன் ருசியை நாம் அறிய முடியும். ஆனால், அப்பொருளைத் தின்டாமலேயே, அதன் வாசனை மூலமே ருசியை உணர வைக்கிறது மூக்கு. உண்மையில் உணவைச் சாப்பிட முதலில் நம்மைத் தூண்ட வைப்பது, அதன் சுவையைவிட, மணம்தான் என்றால் யாராவது மறுக்க முடியுமா?




ஒரு பொருள் நீரில் கரையும் தன்மையுடன் இருந்தால் மட்டுமே அது மூக்கு மற்றும் நாக்கிலுள்ள நரம்பு செல்களைத் தூண்டி, அப் பொருளின் வாசனை/ ருசியை அறிய வைக்கின்றது. அதனாலேயே மூக்கும், நாக்கும் ஈரப் பசையுடன் இருக்கின்றன. ஒரு பொருளின் வாசனையை அறிய அப்பொருட்களின் மூலக்கூறுகள் காற்றில் கலந்து, மூக்கை வந்தடைந்து, அதிலுள்ள கோழைப் பகுதியைத் தொட வேண்டும்.

இயற்கை வாசனையைவிட, செயற்கை வாசனைப் பொருட்களின் தூண்டல் சக்தி அதிகம். (உ-ம் சென்ட்). மூக்கின் கடைப் பகுதியில்தான் மோப்ப


நரம்புகளின் நுனிகள் உள்ளன. இவை உள்ள பகுதிகளில் உட்புறச் சுவர்களின் தோல் மிக மிக மெல்லியதாகவும், அதன் உட்பகுதி நிறைய இரத்த நந்துகிகளும், நரம்பு செல்களும் நிறைந்ததாயும் உள்ளன. தோலின் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் நரம்பு செல்களின் சிலியா பகுதியே, வாசனையை உள் வாங்கி, அதன் தன்மையை உணர வைக்கிறது. நம் மூக்கில் 60,000,000 நரம்பு செல்களும், முயலுக்கு 100,000,000 நரம்பு செல்களும், நாய்க்கு 250,000,000 நரம்பு செல்களும் உண்டு. நம்மால் 400 வகை வாசனைகளை அறிய முடியும். ஆனால் சளி பிடித்தால் நம்மால் வாசனையை அறிய முடியாது.

நீர் வாழ் விலங்குகளான மீன்களுக்கு உடல் முழுவதும் வேதி வாங்கி செல்கள் உள்ளன. வலசை போகும் மீனான சால்மன், தான் வாழும் இடமான கடலிலிருந்து இனப்பெருக்கம் செய்வதற்கு பரம்பரை பரம்பரையாய் ஒரு குறிப்பிட்ட ஆற்றையே நாடிச்செல்கிறது. அந்த ஆற்றை எப்படி கண்டுபிடிக்கிறது தெரியுமா? அந்த ஆற்று நீரின் வாசனையால்தான். தவளைக்கும் உடல் முழுவதும் உணரும் திறன் உண்டு. பாம்பு, பல்லி போன்றவை தன் நாக்கின் நுனியாலேயே சுவையை உணருகின்றன. பறவைகளுக்குப் பார்வைத் திறன்தான் அதிகம். நுகரும் திறன் அவற்றிற்கு இல்லை. பாலூட்டிகளில் நுகர்திறன் அவற்றின் ஈரமான மூக்குப் பகுதியில் மட்டுமே! பெரும்பாலான பாலூட்டிகள் மற்றும் விலங்குகள் மோப்ப சக்தி இல்லையென்றால் எப்போதோ அழிந்திருக்கும். ஏனெனில் உணவின் தன்மை அறியவும், எதிராளியின் இருப்பிடத்தை வாசனை மூலம் அறியவும், தன் நண்பன் அல்லது இனத்தை அறியவும் இனப் பெருக்கத்திற்கான இணையைத் தேடவும் நுகர்திறன்தான் உதவுகிறது. நிறைய புலாலுண்ணிகள் தன் எல்லையை நிர்ணயிக்க, தான் வாழும் இடத்தைச் சுற்றி சிறுநீர் கழிக்கும். ஒவ்வொரு விலங்குக்கும் - மனிதனையும் சேர்த்துத்தான் - ஒவ்வொரு வித்தியாசமான வாசனை உண்டு. நம்மை விட விலங்குகளில் மிக அதிகமான மோப்ப சக்தி உடையது நாய். இதனால்தான் போலீஸ் நாய்கள், குற்றவாளிகளை வாசனை மூலமே கண்டுபிடிக்கின்றன.


நாயைவிட மோப்ப சக்தி உள்ள பிராணிகளும் உண்டு. அவை பூச்சி இனங்கள். ஆண் பட்டுப் பூச்சிகள் தன் இனத்தைச் சேர்ந்த பெண் பட்டுப் பூச்சியை, அதன் மணத்தின் மூலமே கிட்டத்தட்ட மூன்று கி.மீ சுற்றளவு தூரம் வரை கண்டுபிடித்து விடும். வாசனை உணர பூச்சிகளுக்கு நம்மைப் போல் மூக்கு கிடையாது. உணர் கொம்புகளே நுகரும் உறுப்பு. நம் போல் சமூகமாய் சேர்ந்து வாழும் கரையான், தேனீ மற்றும் எறும்புகளின் வாசனைத் திறன் அதிகம். இவை உணவின் வாசனை மட்டுமின்றி, அவற்றின் இனத்தின் வாசனை, கூட்டின் வாசனை மட்டுமின்றி, கொடுக்கின் வாசனை, மெழுகின் வாசனை என ஒவ்வொரு வாசனையையும் இனம் பிரித்து அறிகின்றன. எறும்புகள் சாரை சாரையாய் செல்லும்போது பார்த்திருப்பீர்களே! அவற்றில் ஒவ்வொரு எறும்பும் மற்ற எறும்புகள் ஒவ்வொன்றைத் தொட்டுப் பார்த்துவிட்டே வரிசையில்



• வாசம் அறிதல்



• மெதுவாக மூச்சு விடுதல்



• ஆழமாக மூச்சு விடுதல்

நகரும். இது தன் இனமா இல்லையா என்று கண்டறியவே! ஆனால் ஒரு எறும்பை நீரில் நனைத்து வெளியே போட்டால், அதன் கூட்டம் அதனை ஏற்றுக் கொள்ளாது, எதிரி என நினைத்துக் கொன்றுவிடும். ஏனெனில் நீரில் நனைக்கப்பட்ட எறும்பின் வாசனை போய் விடும். தேனீக் கூட்டத்திலும் இதே கதை தான். கொடுக்கை இழந்துவிட்ட தேனீக்கு, அதன் கூட்டத்தில் இடம் கிடையாது; பழைய கூட்டுக்குள் நுழைய முடியாது. கொடுக்கை இழந்த தேனீயை வேற்றுத் தேனீ என நினைத்து மற்ற தேனீக்கள் கொன்றுவிடும். தேனீக்கள் வாசனையை மிகத் துல்லியமாக உணர முடிவதால் தான், தேனைத் தேட பல மைல்கள் கடந்து, மணம் தரும் பூக்களை நாடுகின்றன.

இயற்கை வாசனையைக் கிட்டத்தட்ட ஏழு வகையாகப் பிரிக்கலாம். நெஞ்சை மயக்கும் பூ வாசனை, நாக்கில் எச்சில் சுரக்கும் பழ வாசனை, சுகந்தமான கற்பூர வாசனை, மனதை மயக்கும் 'சென்ட்' வாசனை, மூக்கை உறுத்தி தும்மல் போட வைக்கும் கார வாசனை, பிடிக்காத கருகல் வாசனை, அழுகிய வாசனை என்பன! மிகக் குறைந்த வாசனை மூலக்கூறுகளால் தூண்டப்படும் நுகர் செல்கள், தொடர்ந்து அவை தூண்டப்பட்டு செயல்படும்போது விரைவிலேயே களைத்து செயலிழந்து விடுகின்றன. உங்கள் அறைக்குள் நுழைகிறீர்கள். அம்மா ஏற்றி வைத்த ஊதுபத்தி கமகமவென்று மணக்கிறது. கொஞ்ச நேரத்துக்குத்தான்; அதன் பின் நீங்கள் அந்த வாசனையை உணர்வதில்லை. அந்த அறையில் வேறு மணம் உள்ள பொருள் ஏதாவது வந்தால்தான், மூக்கு மீண்டும் வேறு வாசனையை உணரும். ஒரு சிலருக்கு பரம்பரையாகவே, சில பொருட்களின் வாசனையை உணர முடியாது. வேதி வாங்கி செல்கள் குறிப்பிட்ட ஜீன்கள் மூலம் செயல்படுவதால், அந்தக் குறிப்பிட்ட ஜீன்கள் இல்லையெனில் – அவரால் அதற்குரித்தான வாசனையை அறிய முடியாது.

நாக்கும் மூக்கும் நெருங்கிய சொந்தக்காரர்கள் என்பதற்கு ஒரு சிறு சோதனை.



நீங்கள் வீட்டில் தினம் காபியோ, டீயோ குடிப்பீர்கள் அல்லவா? அப்போது கொஞ்சம் ஏலக்காய் அல்லது இஞ்சியை மூக்கால் முகர்ந்து கொண்டு டீ/காபி குடிக்கவும். ஏலக்காய் டீ/இஞ்சி காபி குடித்தது போன்ற உணர்வு ஏற்படும். அதேபோல் வாயில் ஆப்பிளைப் போட்டு மென்றுகொண்டு, மூக்கால் கொய்யாப் பழத்தை நுகர்ந்தால், கொய்யாப்பழ வாசனையுள்ள ஆப்பிளைச் சாப்பிடுவது போல் இருக்கும்.

எப்படி பாதுகாப்பது?

- அதிகமான செயற்கை வாசனைப் பொருட்கள் மூக்கிற்கு அலர்ஜியை உண்டு பண்ணும்.
- தூசு படிந்த இடங்களில் வேலை செய்யும்போதும், கடக்கும்போதும் கைக்குட்டையால் மூக்கைப் பொத்திக் கொள்ள வேண்டும்.
- மற்றவர்கள் கைக்குட்டைகளைப் பயன்படுத்தக்கூடாது. தும்மும்போது கைக்குட்டையால் மறைக்க வேண்டும்.
- மூக்கைத் தினமும் சுத்தம் செய்ய வேண்டும்.

— எஸ். மோகனா,

மூஷிகவாகனர்

"**ஸ்**வாமி! ஆசிரமத்தில் ஒரு வஸ்திரத்தைக் கூட அந்த மூஷிகம் விட்டு வைப்பதில்லை. கோலை விட்டெறிந்தால் வளைக்குள் போய் விடுகிறது. வளையைத் தோண்டிப் பார்த்து விடலாமென்றால் வளை 'பொத, பொத'வென்று போய்க் கொண்டே இருக்கிறது."

"அது பாதாளம் வரை தோண்டியிருக்குமோ? நேற்று சுப்புணி வைத்துக் கொண்டிருந்த அப்பத்தைப் பிடுங்கிக் கொண்டு போய் விட்டது."

பராசரருக்குப் பெருச்சாளிப் பிரச்னை பெரியதாகி விட்டது. ஞான திருஷ்டியால் அது யாரென்று பார்த்தார்.

"கௌபரி முனிவரின் சாபத்தால் மூஷிகமாகி இங்கு வந்து தொந்தரவு செய்கிறான் கிரவிஞ்சன் என்ற கந்தர்வன். அவன் கொட்டத்தை அடக்க விநாயகரை வேண்டுவோம்" என்றார் பராசரர்.


ஆசிரமவாசிகள் கூட்டாக விநாயகரை வேண்டினர். விநாயகர் வந்தார். மூஷிகம் வந்ததும் கோடாலியை அதன் மேல் எறிந்தார். மூஷிகம் பதினான்கு உலகங்களிலும் ஓடியது. பரசு ஆயுதமும் அதைவிடவில்லை. கடைசியில் தளர்ந்து போன மூஷிகம் விநாயகர் பாதங்களைச் சரண

விநாயகர் மழையைத் தோற்றுவித்தார். காலநேமி புயலாக மாறி நாசம் விளைவித்தான். மலையாக மாறி நின்றார் பிள்ளையார்.

டைந்தது.

விநாயகர் அதன் மேல் ஏறி அமர்ந்தார். அதன் கர்வம் அடங்கியது. ஆசிரமவாசிகள் ஆனந்தம் கொண்டனர்.

பராசரர் "கணேசப் பெருமானே! இமயமலைக்கும் விந்திய மலைக்கும் நடுவே ஹேமவதி என்ற நகரம் உள்ளது. அதை ஆண்ட அபிநந்தனன் பெரிய யாகம் நடத்த முனைந்தான். இந்திரன் அந்த யாகத்தை



அழிக்க கால நேமியை ஏவினான். தன் பதவி பறிபோய் விடுமோ என்று இந்திரனுக்குப் பயம். காலநேமி அபிநந்தனனைக் கொன்று அந்த யாகத்தை அழித்த தோடு நில்லாமல் எங் குமே ஹோமங்கள் நடைபெறாதபடி யாக பண்டங்களை



ஆர். பொன்னம்மாள்

நாசம் செய்கிறான். முனிவர்களைத் துன் புறுத்துகின்றான். இந்தத் துன்பத்திலிருந்தும் எங்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டினார்.

விநாயகர் அவ்வண்ணமே செய்வதாகக் கூறி தன் கையிலுள்ள அங்குசத்தை ஏவி

னார். அங்குசம் காலநேமியைக் கட்டி இழுத்து வந்து விநாயகர் முன் நிறுத்தியது. கோரைப் பற்களும், சிவந்த கண்களும், பிரம்மாண்டமான கருத்த உடலும், பரட்டைத் தலையும் கொண்டிருந்த காலநேமி விநாயகரின் சிறு கண்களின் தீட்சண்யமான பார்வையை நேருக்கு நேர் சந்திக்க இயலாமல் பெருகும் வெள்ளமாக மாறி, அனைத்து மக்களையும் அலற வைத்தான்.

விநாயகர் கோபமுற்று தன் உள்ளங்கையை நீட்டினார். நீரெல்லாம் அவர் கைக்குள் மறையும் வேளையில் பெரிய காக்கை உருக்கொண்டான் காலநேமி. காக்கையின் இறக்கைபட்டு மரங்கள் வேரோடு சாய்ந்தன. மலைகள் கிடுகிடுத்தன. எங்கும் ஜனங்களின் கூச்சல்; குழப்பம்.

கடல் 'சுருசுரு'வென வற்றியது. ஒரு தாமரை மலரை காக்கையின் மேல் வீசினார் கணபதி. உடனே காலநேமி தீ ஜ்வாலையாக மாறி பயிர், பச்சைகள், மிருகங்கள், மனிதர்கள் எல்லோரையும் எரிக்கத் தொடங்கினான்.

விநாயகர் மழையைத் தோற்றுவித்தார். காலநேமி புயலாக மாறி நாசம் விளைவித்தான். மலையாக மாறி நின்றார் பிள்ளையார். புயலால் மலையைத் தாண்டிப் போக முடியவில்லை! வஜ்ராயுதமாக மாறிய காலநேமி மலையைப் பிளக்க வேகமாக வந்தான். தாயாரை நினைத்தபடி வேலை வீசினார் கணேசர். வஜ்ராயுதத்தை வேல் துண்டாக்கியது.

காலநேமி பயங்கரமான ஆயுதங்களைச் சிருஷ்டித்து ஏவினான். வேலாயுதம் அனைத்தையும் தகர்த்தது. காலநேமி விநாயகர் பாதங்களில் விழுந்து மன்னிக்கும்படி வேண்டினான்.

"சரணடைந்தவர் எத்தனை பெரிய பாவியானாலும் அவர்களை நான் தண்டிப்பதில்லை. எனக்கு அபசாரம் செய்பவர்களை மட்டும் இனி பிடித்துக் கொள். கூடவே சோம்பேறித்தனத்தையும், குரோதத்தையும் கூட்டிச் செல்" என அருளினார்.

வேலாயுதம் கணேசரின் கைக்கு வந்தது.

"ப்ரபோ! காலநேமி, மூஷிகம் இருவரின் விக்னங்களையும் துவம்சம் செய்ததால் இன்று முதல் உங்களை விக்னேஸ்வரர் என்ற பட்டம் கொடுத்து அழைக்க அனுமதிக்க வேண்டும்" என்று கோரினார் பராசரர்.

அப்படியே வரமளித்து மறைந்தார் விக்னேஸ்வரர்.

அபூர்வ

உலகில் ஒரே மாதிரியாக ஏழு பேர் இருப்பார்கள் என்று சொல்வதைக் கேள்விப்பட்டிருப்போம். உண்மையில் ஏழு பேர் ஒரே மாதிரி உலகில் இருக்க வாய்ப்பில்லை. ஆனால் ஒரே மாதிரியான இருவரை நம்மால் சந்திக்க முடியும் எப்படி? அபூர்வமாகப் பிறக்கும் இரட்டையர்களால்தான்! எல்லா இரட்டையர்களும் உருவத்தில் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சிலர் குழந்தைகளாக இருக்கும்போது உருவம் ஒரே மாதிரியாக இருந்தாலும் சிறிது வளர்ந்தவுடன் மாற்றம் ஏற்பட்டு விடும்.

சினிமாக்களில் இரட்டை வேடங்களில் வரும் கதாபாத்திரம் எவ்வளவு குழப்பத்தை ஏற்படுத்துகிறது என்பது நமக்குத் தெரியும்.

இனி இரண்டு ஜோடி இரட்டையர்களால் அவர்களுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும் ஏற்பட்ட அனுபவங்களைப் பார்ப்போம்.

சென்னையில் உள்ள நங்கநல்லூரில் வசிக்கிறார்கள் ஐஸ்வர்யா, சௌந்தர்யா. ஒரளவு வளர்ந்த நிலையிலும் இவர்களிடம் வித்தியாசம் காண்பது என்பது நமக்கு மட்டுமல்ல, அவர்கள் அம்மாவுக்கே கடினம்தான்.

இருவரும் படிப்பது ஒரே பள்ளியில், ஒரே வகுப்பில்தான். "ஒருமுறை ஐஸ்வர்யா கணித வகுப்பில் சந்தேகம் கேட்டாள். ஆசிரியை கரும்பலகையில் விளக்கி எழுதிக் கொண்டிருந்தார். நான் அந்தக் கணக்கை விரைவாகப் போட்டு அவரிடம் எடுத்துப் போனேன். என் நோட்டைப் பார்த்தவருக்குக் கோபம். 'சந்தேகம் கேட்டே, அதைச் சொல்லி முடிக்கிறதுக்குள்ளே போட்டுட்டு வந்துட்டே' எனக் குட்டினார். எனக்கு அழுகையே வந்துவிட்டது. நான் நடந்ததைச்

* ஐஸ்வர்யா, சௌந்தர்யா



சகோதரிகள் சகோதரர்கள்!

சொன்னவுடன் ஆசிரியை வருத்தம் தெரிவித்தார். ஐஸ்வர்யா சிரித்தபடி உட்கார்ந்திருந்தாள்'' என்றாள் செளந்தர்யா.


''இப்படி நிறைய சம்பவங்கள் மாற்றி, மாற்றி நடப்பதுண்டு. நான் பசிக்கிதுன்னு கேட்டால் அம்மா செளந்தர்யாவுக்குச் சாப்பாடு போடுவாங்க. ஒருமுறை பேச்சுப் போட்டியில் செளந்தர்யாவுக்குப் பரிசு அறிவிச்சாங்க. நான் மேடைக்கு அருகில் நின்றிருந்தவுடன் என்னை ஏற்றி விட்டு விட்டார்கள். நான் எடுத்துச் சொல்வதற்குள் பரிசு என் கைக்கு வந்து விட்டது. பாவம் செளந்தர்யா போட்டியில் ஜெயிச்சும் பரிசு வாங்க முடியலை. பிறகு நானும் அம்மாவும் அவளைச் சமாதானப் படுத்தினோம்'' என்றாள் ஐஸ்வர்யா

இவர்களின் அம்மா சொல்கிறார்: ''எனக்கு இவங்க பிறந்ததிலிருந்தே குழப்பம்தான். ஒரு குழந்தைக்கு உடல் நலமில்லையென்றால், நோய்த் தொற்றால் அடுத்த குழந்தைக்கும் விரைவில் நோய் வந்துவிடும். எந்தக் குழந்தைக்கு மருந்து கொடுத்தோம் என்பதே புரியாது. அதனால் ஒரு குழந்தையின் காலில் காப்பு போட்டு சமாளிப்பேன். ரெண்டு பேருக்கும் ஒரே மாதிரி டிரஸ், ஒரே கலர்தான். அது போல இருவருமே டான்ஸ், நாடகம், பேச்சுப் போட்டி அனைத்திலும் திறமையானவர்கள். ஆரம்பத்தில் ஒரே மாதிரி இருந்த கையெழுத்தை எங்கள் முயற்சியால் மாற்றியிருக்கிறார்கள்.''

அடுத்து அருண் வருணைப் பார்க்கலாம். மூன்றாம் வகுப்பு படிக்கும் இருவரும் சென்னையில் ஆதம்பாக்கத்தில் வசிக்கிறார்கள்.

''எங்களுக்கு அருண், வருண்னு தனித் தனிப் பேர் இருந்தால்கூட பள்ளியில் எங்களை இருவர் பெயரையும் சேர்த்து 'அருண் வருண்' என்றே அனைவரும் கூப்பிடுவார்கள். ஆரம்பத்தில் ஒரே வகுப்பில் இருந்தாலும் இப்ப நாங்க ரெண்டு பேரும் வேற வேற செக்ஷன். அப்படியும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை'' என சிரிக்கிறான் அருண்.

''எங்கள் இருவருக்கும் ஒரே டிசைன் டிரஸ் என்றாலும் நிறம் வேற, வேறதான் எடுப்பாங்க. அப்படியும் எங்க அப்பா, அம்மாவுக்கே கண்டுபிடிக்கிறது கஷ்டம். நாங்களா சொன்னால்தான் உண்டு. வீட்டில் விஷமம் பண்ணும்போதோ, பிடிக்காத மாத்திரை விழுங்க நேரிடும்போதோ, 'நான் வருண் இல்லை; அவன்தான்' என்று சொல்லி கலாட்டா பண்ணுவோம். அவர்கள் திண்டாடிவிடுவார்கள்'' என்று சிரிக்கிறான் வருண்.



* அருண், வருண்

இவர்களின் அப்பா ''எனக்கு ரொம்ப ஆச்சரியமான விஷயம், இவர்களின் பரீட்சை பேப்பர்தான். ரெண்டு பேரும் வீட்டிலும் தனித்தனியா படிக்கிறாங்க. பள்ளியிலும் தனியாகத்தான் பரீட்சை எழுதறாங்க. ஆனால் இருவரின் விடைத்தாள்களைப் பார்த்தால் பிரமிப்பா இருக்கும். ஒருத்தன் ஒரு கேள்விக்குத் தப்பா விடை எழுதியிருந்தான்னா, இன்னொருத்தனும் அதே கேள்விக்குத் தப்பாதான் எழுதியிருப்பான். விடைத்தாள்களைப் பலமுறை நான் ஒப்பிட்டிருக்கிறேன். கையெழுத்துல மட்டும் இவங்களை அடையாளம் காண முடியும்'' என்றார்.

இரட்டையர்களால் சாதக, பா ,க விஷயங்கள் இருந்தாலும் அதில் ஒரு சந்தோஷம் இருக்கத்தான் செய்கிறது அல்லவா...?

அட்டையில்: **ஐஸ்வர்யா, செளந்தர்யா**

அட்டை வண்ணப்படம்

மற்றும் படங்கள்: **கிருஷ்ணமூர்த்தி**

கோகுலம் நிழல்

பாரத ரத்னா

இந்த ஆண்டு பாரத ரத்னா விருது இசையரசி லதா மங்கேஷ்கர் மற்றும் ஷெனாய் இசைமேதை பிஸ்மில்லாகான் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. பாரத ரத்னா நாட்டின் மிக உயர்ந்த விருது. 70 வயதான லதா மங்கேஷ்கர் 30,000 பாடல்களைப் பாடியிருக்கிறார். 50 ஆண்டுகளுக்கும் மேலாகப் பாடி வரும் இவருக்கு பத்மபூஷன், தாதா சாஹிப் பால்கே விருதுகள் ஏற்கனவே அளிக்கப்பட்டிருக்கின்றன.



• லதா மங்கேஷ்கர்

2 கோடி ரூபாய் வயலின்

இரண்டு கோடிக்கும் அதிகமான மதிப்பு கொண்ட வயலின் ஒன்று ஜெர்மனியில் திருடப்பட்டுள்ளது. 316 ஆண்டுகளுக்கு முன்பு தயாரிக்கப்பட்டது இந்த அரிய வயலின். வயலின் தயாரிப்பில் பிரபலமாக இருந்த ஆந்தரியா குவார்னேரி என்பவர் 1684 ஆம் ஆண்டு இந்த வயலினைத் தயாரித்தாராம். ஜெர்மனியின் ஸ்கான்டினேவியன் வங்கியிடம் இருந்து வந்த இந்த வயலின், கோலோன் இசைக் கல்லூரி மாணவிக்கு இரவலாக அளிக்கப்பட்டிருந்தது. அம்மாணவி இசைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது தான் திருடு போய்விட்டது.

வறட்சியும் போரும்...

பசியால் வாடுவோர் எண்ணிக்கை உலகில் அதிகரித்து வருகிறது. இதற்குக் காரணம் வறட்சியும் போருமே என்று ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது.

வளர்ந்து வரும் நாடுகளில் வறுமை அதிகமாக உள்ளது. இதற்கு இயற்கையால் ஏற்படும் சேதத்துடன் மனிதர்களால் ஏற்படும் அழிவுகளும் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்றும் ஐ.நா கூறியுள்ளது.

இந்த ஆண்டு உலகில் 8.3 கோடி மக்களுக்குப் போதுமான உணவு கிடைக்காத நிலையும், இன்னும் 20 ஆண்டுகளில் கடும் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் என்றும் அது எச்சரித்துள்ளது.

திருடர்களை விரட்டும் யானைகள்!

இந்தோனேஷியாவில் உள்ள சுமத்ரா காடுகளில் மரங்களைத் திருடுவது தொடர்ந்து வருகிறது. இதைத் தடுக்கும் பொருட்டு அந் நாட்டு அரசாங்கம் யானைகளுக்குப் பயிற்சியளித்து வருகிறது. தற்போது 31 யானைகள் இப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. யானைகளுக்குச் சத்தத்தைக் கேட்டால் எரிச்சல் வரும். ரம்பத்தால் மரத்தை அறுக்கும் சத்தத்தைக் கேட்கும் யானைகள் அந்த இடத்துக்குச் சென்று மரத் திருடர்களை விரட்டியடிக்கும்படி பயிற்சியளிக்கப்பட்டிருக்கிறது. யானைகள் இப் பணியைத் திறம்படச் செய்கின்றனவாம்!

TERROR IN THE CHAMBAL VALLEY

SHORT STORY



THE PRINCE OF CATS

IN THE WILD



A COMEDIAN WHO MADE MOVIE HISTORY

MORE CATS; MORE TROUBLE! - Petpals

LAUGHTER, THE BEST MEDICINE!

JOKES PAGE


GOKULAM

The monthly magazine for children

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai-600 097

MARCH 2001

Rs.6/-



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

புதிர், ஜோக்ஸ், க்விஸ் மட்டுமா? படக்கதைகள், நகைச்சுவைக் கதைகள், புராணக்கதை, கட்டுரை, துணுக்குகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

பெயர் : ....


முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



கோகுலம் க்விஸ் முடிவு!

ஜனவரி மாத க்விஸ் போட்டியில் சரியான விடைகளை எழுதிய 15 பேர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ரூபாய் 13 பரிசு பெறுவோர் :

1. பி. ஹரீஷ் பாலன், நான்காம் வகுப்பு, அலங்காநல்லூர், மதுரை மாவட்டம்.
2. டி.ஜி. சிவப்ரியா, நான்காம் வகுப்பு, மாமல்லன் மெட்ரிக் பள்ளி, காஞ்சிபுரம்.
3. அ.சுபா, பொம்மிடி, தருமபுரி மாவட்டம்.
4. சி. நடராஜன், தின்னப்பட்டி, தர்மபுரி மாவட்டம்
5. கு. தமிழன்பன், ஐந்தாம் வகுப்பு, ஊ. ஒ. தொ. பள்ளி, வாழைப் பந்தல், வேலூர் மாவட்டம்.
6. ஆர். ஜெபசித்ரா, பதினோராம் வகுப்பு, தோட்டப் பாளையம், வேலூர்.
7. எஸ். ராதிகா, பல்லாவரம், சென்னை.
8. எஸ். செந்தில்முருகன், கொன்னாம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.
9. எம். வர்ஷினி, உறையூர், திருச்சி மாவட்டம்.
10. த. சிவபாரதி, எட்டாம் வகுப்பு, ஊ. ஒ. ந. நி. பள்ளி, மல்லிபாளையம், ஈரோடு மாவட்டம்.
11. பி.பி. கிருஷ்ண பிரசாத், சேலம்.
12. என். ரேவதி, மதுரை.
13. ச. ஸ்ரீராம், காட்பாடி, வேலூர் மாவட்டம்.
14. டி. பழனி, ராஜாநகரம் கிழக்கு, திருவள்ளூர் மாவட்டம்.
15. ஜி. சுரேஷ்குமார், சேலம்.

சரியான விடை

1. கார்ட்டூன் காரெக்டர்களை உருவாக்கியவர் வால்ட் டிஸ்னி.
2. புயலை முன் கூட்டியே அறியப் பயன்படும் கருவி பாரோ மீட்டர்.
3. உலகிலேயே மிகச் சிறிய கண்டம் ஆஸ்திரேலியா.
4. முதல் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி நடைபெற்ற நாடு இங்கிலாந்து.
5. சட்லெஜ் நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணை பக்ரா நங்கல்.
6. கங்கை நதி உற்பத்தியாகும் இடம் கங்கோத்ரி.
7. உலகில் அதிகமான நாடுகளைக் கொண்ட கண்டம் ஆப்பிரிக்கா.
8. புளித்த பாலில் உள்ள அமிலம் லாக்டிக் அமிலம்.
9. தமிழ்நாட்டில் வேளாண் பல்கலைக் கழகம் உள்ள இடம் கோவை.
10. துரியோதனனின் தந்தை திருதராட்டினன்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	:	Chennai
2. Periodicity of Publication	:	Monthly
3. Name of Printer	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.
4. Name of Publisher	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.
5. Name of Editor	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital : **Bharathan Publications Private Limited, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.


1.3.2001

K. Rajendran
Publisher


மந்திரத்தால் கிடைத்த மாம்பழம்!

கதை: ஞா. நான்சி,
பத்தாம் வகுப்பு,
அரசு மகளிர்
மேல்நிலைப்பள்ளி,
ஆண்டிபட்டி.
படம்: விண்மணி





கந்தன் மந்திரத்தைச் சோமு காதில் சொன்னான்.
நீ பொய் சொல்லாமல் இருக்கிற வரைதான் மந்திரம் பலிக்கும்.
ரொம்ப நன்றிங்க ஐயா.
நாட்கள் சென்றன. சோமு மந்திரத்தின் உதவியால் நிறைய மாம்பழங்களை விற்றுப் பணம் சம்பாதித்தான்.
சோமுவைப் பற்றிக் கேள்விப்பட்ட அரசன் அவனை அரண்மனைக்கு வரவழைத்தான்.
உன்னிடம் மந்திர சக்தி வந்தது எப்படி?
ம்...கந்தனைப் பற்றி எல்லாருக்கும் தெரிஞ்சிட்டா என் பிழைப்பு எப்படி நடக்கும்?


என்ன, பதில் சொல்ல மாட்டேங்கிறே?
ஒண்ணும் இல்லை அரசே! நான் கடினமாக தவம் செய்து...
....ஒரு முனிவரிடம் இருந்து இந்த மந்திரத்தைப் பெற்றேன்.
சாதாரணமாகக் கற்க முடியாதா?
முடியாது அரசே?
சரி, நீ போகலாம்.
வருகிறேன் அரசே!
அரண்மனையை விட்டு வெளியே வந்த சோமு நேரே மாமரத்தடிக்குச் சென்று மந்திரத்தைச் சொன்னான்.
என்ன மந்திரம் பலிக்கலை! ஐயோ, அரசரி டம் பொய் சொன்னதால் மந்திரசக்தி போய்விட்டதா?

ராஷ்டிரபதிபவன்

இந்திய ஜனாதிபதியாகப் பொறுப் பேற்பவருக்கு ஒதுக்கப்படும் மாளிகைதான் ராஷ்டிரபதிபவன். ராஷ்டிரபதிபவனுக்குத் தனித்துவமும், பெருமைகளும் உண்டு. உலகில் உள்ள பிரம்மாண்டமான மாளிகையில் இதுவும் ஒன்று. ராஷ்டிரபதி பவனை முழுவதுமாகச் சுற்றிப் பார்க்கவே ஓரிரு நாட்கள் தேவைப்படும்.

1911ல் இம்மாளிகை வைஸ்ராய்கள் வசிக்கும் இல்லமாக இருந்தது. சுதந்திரம் பெற்றபோது இது அரசு இல்லம் என்று அழைக்கப்பட்டது. பின் 1950ல் மீண்டும் பெயர் மாற்றப்பட்டு ராஷ்டிரபதிபவன் என்றழைக்கப்படுகிறது.

எட்வின லேண்ட்சீர் லட்யன்ஸ் என்ற புகழ்பெற்ற பிரிட்டனைச் சேர்ந்த கட்டடக் கலை வல்லுநர் இம்மாளிகையைக் கட்டினார்.

மாளிகையின் கட்டட பணிகள் நடந்துமுடிய 18 ஆண்டுகள் ஆனது. கட்டட பணியில் 23 ஆயிரம் பேர் ஈடுபட்டனர். இதில் 3 ஆயிரம் பேர் கற்களைச் செதுக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இம்மாளிகையைக் கட்ட 1 கோடியே 40 லட்சம் செலவு என்று ராஷ்டிரபதி பவனின் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

1931ஆம் ஆண்டு ஜனவரி 23ல் இர்வின் பிரபு வைஸ்ராய் இல்லத்தில் குடிபுகுந்தார்.

இர்வின், வெலிங்டன், லின்லித்கோ, வேவில் மற்றும் மவுன்ட் பேட்டன் ஆகிய 5 வைஸ்ராய்கள் இங்கு இருந்துள்ளனர்.

மவுன்ட்பேட்டனுக்குப் பிறகு கவர்னர் ஜெனரலாகப் பதவியேற்ற ராஜாஜி இங்கு அதிகார பூர்வமாகக் குடியேறிய முதல் இந்தியர் ஆவார்.

இம் மாளிகையின் மொத்த பரப்பளவு 330 ஏக்கர்.

340 அறைகள் வெவ்வேறு அளவில் இங்கு உள்ளன. இதில் விருந்தினர்களுக்கான அறைகள் 31 உள்ளன.

31 செயற்கை நீரூற்றுகளும் உண்டு.

ராஷ்டிரபதிபவனின் மையப்பகுதியான தர்பார் ஹாலில்தான் விழாக்கள் நடைபெறுகின்றன.

தர்பார் ஹால் உள்ளே புத்தர் சிலை ஒன்று உள்ளது. சிலையின் இருபுறமும் அரசியலமைப்பின் முன்னுரை வாசகங்கள் இந்தியிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளன.




இங்குள்ள மொகல் தோட்டத்தில் குளங்கள், நீரூற்றுகள் பூந்தோட்டங்கள் இடம் பெற்றுள்ளன. 250 வகையான ரோஜாக்கள் இருக்கின்றன.

செயற்கையாக உருவாக்கப்பட்ட வனங்களும், வேம்பு உள்ளிட்ட 600 முக்கிய வகைத் தாவரங்களும் உள்ளன.

9 டென்னிஸ் ஆடுதளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.


மொகல் தோட்டம் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் பொது மக்களுக்குத் திறக்கப்படுகிறது.

- எஸ். பிரசாத், மணல்மேடு




முதல் பரிசு
எஸ். பார்கவி, ஏழாம் வகுப்பு,
எஸ்.பி.கே பெண்கள் உயர்நிலைப் பள்ளி,
அருப்புக்கோட்டை.

இரண்டாம் பரிசு
ஞா. நான்சி, பத்தாம் வகுப்பு.
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,
ஆண்டிபட்டி.




ஜனவரி இதழில் ரோஜா என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.


ஓவியப் போட்டி முடிவுகள்!



மூன்றாம் பரிசு
டி.ஜி. சிவப்ரியா,
நான்காம் வகுப்பு,
மாமல்லன் மெட்ரிக் பள்ளி,
காஞ்சிபுரம்.



ஆறுதல் பரிசு
கே.உமா,
சத்திரம்கருப்பூர்.



ஆறுதல் பரிசு
ராகவேந்திரன்,
ஏழாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
ஆர்.கே.பேட்டை,
திருவள்ளூர் மாவட்டம்.

பாம்பு கடித்தவுடன் விஷம் ரத்தத்தில் சேர்ந்து அதை உறைய வைக்கிறது. ரத்தம் மிகவும் கெட்டியாகி ரத்தக் குழாய்களை அடைத்து விடுகிறது. ரத்த ஓட்டம் தடைப்படுகிறது. இதனால் உயிருக்கு ஆபத்து ஏற்படுகிறது. சில நேரங்களில் பாம்பு கடித்தவுடன் ரத்தப் போக்கு ஏற்பட்டும் மரணம் உண்டாகிறது. பாம்பின் விஷத்தை முறிக்க பாம்பு விஷத்தையே மருந்தாகப் பயன்படுத்துகிறார்கள். இது போன்று கடிபட்டவர்களுக்கு இந்திய நல்ல பாம்பின் விஷத்தைப் பயன்படுத்துகிறார்கள். மலேயன் அடர் என்ற பாம்பின் விஷம் ரத்தத்தை உறையவிடாமல் தடுக்கிறது. மயக்க மருந்துகள் மற்றும் ஆஸ்துமாவைக் குணப்படுத்தும் மருந்துகள் தயாரிக்கவும் பாம்பு விஷம் பயன்படுகிறது.

பாம்புக்குப் பண்ணை!

பாம்பு விஷம் நோய்களைக் குணப்படுத்த மட்டும் அல்ல. நோய்களைக் கண்டறியவும் பயன்படுகிறது. (முக்கியமாக ரத்த சம்பந்தமான வியாதிகள்). பாம்பு விஷத்துக்கு மாற்றாக ஒரு மருந்தை இது வரை வேதியியல் அறிஞர்கள் கண்டுபிடிக்கவில்லை. ஒவ்வொரு ஆண்டும் ஏராளமான அளவில் பாம்பு விஷம் தேவைப்படுகிறது. எங்கிருந்து அதைப் பெறுவது?

பாம்பு விஷத்தின் மகத்துவம் தெரிந்ததும் ஏராளமான பாம்புகளைப் பிடிக்க ஆரம்பித்தார்கள். ஒரு சிறிய கண்ணாடிக் கிண்ணத்தை, பாம்பின் வாய் அருகில் கொண்டு வந்து, அதைப் பாம்பு கொத்தும் போது ஒரு துளி விஷம் வெளிவரும். இவ்வாறு பாம்பு விஷத்தைச் சேகரிப்பார்கள். ஆனால் இந்த முறையில் விஷத்தை எடுப்பது கடினமான வேலையாகவும் ஆபத்தானதாகவும் இருந்தது. எனவே கோழிப் பண்ணை, ஆட்டுப் பண்ணை போல பாம்புப் பண்ணையை உருவாக்கினார்கள். பாம்புப் பண்ணைக்கு செர்பெண்டேரியம் என்று பெயர்.

முதல் பாம்புப் பண்ணை பிரேசில் நாட்டில் 1901 ஆம் ஆண்டு சா பால்லோ நகரத்தில் அமைக்கப்பட்டது. பிரேசில் நாட்டில் சென்ற நூற்றாண்டில் ஒவ்வொரு வருடமும் 20000 மக்கள் பாம்புக் கடி பட்டார்கள். அவர்களில் 90% பேர் இறந்தார்கள். எனவே பாம்புப் பண்ணைகள் அமைப்பதில் பிரேசில் நாடு தீவிரம் காட்டியது. பிரேசில் நாட்டு மக்கள் பாம்புப் பண்ணைகள் அமைக்க எல்லாவித உதவிகளும் செய்தார்கள். வெவ்வேறு விதமான பாம்புகளைப் பிடித்துக் கொடுத்தார்கள். பிரேசில் அதிகாரி



கள் நாட்டின் பல பகுதிகளிலும் பாம்பு களைப் பிடித்து தபாலில் அனுப்புவதற்கு வசதியாக அதற்கென்று பாம்புப் பெட்டி கள் வைத்தார்கள். பாம்புகளை அனுப்ப தபால் கட்டணம் கிடையாது. பிரேசிலில் உள்ள புடான்டன் என்ற பாம்புப் பண் ணைதான் உலகத்திலேயே மிகப் பெரிய தும் பழமையானதும் ஆகும்.

பாம்புப் பண்ணையில் வெவ்வேறு இனப் பாம்புகளைக் கூண்டுகளில் வைத் திருப்பார்கள். குறிப்பிட்ட கால இடை வெளியில் விஷம் எடுப்பார்கள். பொது வாக ஒருமுறை விஷம் எடுத்தபின் 2 – 3 வாரங்களுக்குப் பின் அடுத்தமுறை விஷம் எடுப்பார்கள். அதிக அளவு விஷம் எடுப் பதற்காக பாம்பின் விஷச் சுரப்பிகளை மசாஜ் செய்து விடுவார்கள். க்யூர்ஷா என்ற பாம்பு ஒரு தடவைக்கு 300 மில்லி கிராம் விஷம் கொடுக்கும். நல்ல பாம்பு



200 மி.கி. கொடுக்கும். பாம்பு விஷம் எடுப்பதற்குத் தற் போது ஒரு புதுமுறையைக் கையாளுகிறார்கள். அதன்படி பாம்பின் வாயில் மிகக் குறைந்த சக்தி உள்ள மின்சாரத்தைச் செலுத்தி அதிக அளவு விஷம் எடுக்கிறார்கள். எடுத்த விஷத்தை அப்படியே பயன்படுத்த மாட்டார்கள். அது மூலப் பொருள்தான். அதைக் காற்று புகாத இடத்தில் உலர வைத்து அதன் அளவை 5ல் ஒரு பங்கு அல்லது 6ல் ஒரு பங்காகக் குறைத்து சிறு சிறு படிகங்களாகச் செய்வார்கள்.

தற்போது பாம்பு விஷத்துக்குத் தட்டுப் பாடு ஏற்பட்டு உள்ளது. மக்கள் பாம்பு களைக் கண்டவுடனே கொல்கிறார்கள். பாம்புகள் வாழுமிடங்களும் குறைந்து கொண்டு வருகின்றன. பாம்புகள் மனி தனைக் கொத்துவதற்காக வெறியோடு காத்திருப்பதாக மக்கள் கற்பனையோடு இருக்கிறார்கள். ஒரு மனிதன் பாம்பின் அருகில் வந்தால் அது அவனைத் துரத்திச் சென்று கொத்தும் என்று நினைக்கிறார் கள். உண்மையில் பாம்பு மனிதனைப் பார்த்தால் ஓடி ஒளிந்து கொள்ளத்தான் பார்க்கும். அதைத் துன்புறுத்த நினைத் தாலோ அல்லது தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவோ மட்டுமே அது கொத் தும்.

1930ல் ஒரு அமெரிக்க விலங்கி யலாளர் கூறினார்: "ஒவ்வொரு ஆண் டும் அமெரிக் காவில் கார் விபத் தில் 3000 பேர் இறக்கிறார்கள். ஆனால் பாம்பு கடித்ததால் செத்த வர்கள் 100 பேர் தான். (அதன் பிறகு கார் விபத்தில் பலி யானவர்களின் எண்ணிக்கை அதி கரித்தது. ஆனால் பாம்புக் கடியி னால் பலியானவர் கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது.) ஆனாலும் மக்கள் பாம்பைத் தங்கள் எதிரியாகக் கருதும் எண்ணம் தொடர் கிறது. அதன் விஷம் மதிப்புமிக்கதாக இருந்தாலும் பாம்புகளை அழிப்பதுதான் தொடர்கிறது" என்றார்.

— க. தேவி மீனாட்சி,
அருப்புக்கோட்டை.



நஷ்ட ஈடு!
கதை:
க. அட்சயா,
ஒன்பதாம் வகுப்பு,
ராணி மெய்யம்மை பள்ளி,
புலியூர், கரூர் மாவட்டம்
படம்:
மகேஷ்
நான்கு வியாபாரிகள் ஒன்றாகச் சேர்ந்து துணிக்கடை நடத்தினர். லாபத்தைச் சரி சமமாகப் பிரித்துக் கொண்டனர்.
வரதா, அங்கே பார். அழகான பூனை!
ஆமாம். இங்கு எப்படி?
எப்படி வந்தால் என்ன? நம் கடையில் எலித் தொல்லையை ஒழிக்க இது உதவுமே!
ஜவுளி
அப்ப நாமே வளர்க்கலாம்.
பூனையைப் பராமரிப்பதிலும் நாம் ஒற்றுமையாக இருக்கணும்.
சரி. ஆளுக்கு ஒரு காலைப் பராமரிக்கலாம்.
நாட்கள் சென்றன. ஒருநாள் –
ஐயோ, என் பராமரிப்பில் உள்ள கால் பலமாக அடிபட்டிருக்கே!
எண்ணெய்த் துணியைச் சுற்றிக் கட்டி வை.
மறுநாள் நால்வரும் வியாபார விஷயமாக வெளியூர் சென்றனர்.
பூனையின் காலில் சுற்றப் பட்டிருந்த துணியில் திடீரென தீப்பற்றிக் கொண்டது.


பூனை எரிச்சல் தாங்காமல் துணி மூட்டைகளின் மீது ஓடியது.
சிறிது நேரத்தில் மூட்டைகள் எல்லாம் எரிந்து சாம்பலாயின.
மறுநாள் நால்வரும் திரும்பி வந்தனர்.
வரதா, உன்னுடைய பராமரிப்பில் உள்ள காலினால்தான் விபத்து நடந்துள்ளது. நீதான் எங்கள் மூவருக்கும் நஷ்டஈடு தர வேண்டும்.
அது எப்படி? நீதிபதியிடம் செல்லலாம்.
வழக்கை ஆராய்ந்த நீதிபதி –
அடிபட்டக் காலால் பூனை, மூட்டைகள் மேல் தாவியிருக்க முடியாது. மற்ற கால்களால்தான் ஏறியிருக்கும்.
எனவே நீங்கள் மூவரும்தான் வரதனுக்கு நஷ்டஈடு தர வேண்டும்.
நன்றிங்க ஐயா..
அவசரப்படாதே! அடிபட்டக் காலில் எண்ணெய்த் துணி சுற்றியிருக்காவிட்டால் தீயே பிடித்திருக்காது. ஆகவே யாரும் யாருக்கும் நஷ்டஈடு தர வேண்டாம்.
இனிமேலாவது முட்டாள்தனமாக வேலை செய்யாமல் வியாபாரம் செய்வோம், வாருங்கள்.

“யுரேகா”

இன்றைக்கு 2260 ஆண்டுகளுக்கு முன்னர் கிரேக்கத்தில் வாழ்ந்தவர் விஞ்ஞான மேதை ஆர்க்கிமிடீஸ். நீரில் ஒரு பொருளை அழுத்தினாலும், மிதக்க விட்டாலும் அந்தப் பொருள் எவ்வளவு தூரம் நீரில் அமிழ்கின்றதோ அதே எடையுள்ள நீர் மேலே வரும் என்பதைக் குளியல் தொட்டியில் குளித்துக் கொண்டிருந்த போது தற்செயலாகக் கண்டு கொண்ட மாமேதை.

அந்த மகிழ்ச்சியில் “யுரேகா! யுரேகா!”

“ஆர்க்கிமிடீஸ் என்ற அந்தக் கணித அரக்கன் இருக்கும்வரை நம்மால் ஒன்றுமே செய்ய முடியாது”

(கண்டுபிடித்து விட்டேன்... கண்டுபிடித்து விட்டேன்) என்று கூவியவாறே தெருவில் இறங்கி ஓடியவர், பின்னர் அதை மேலும் ஆராய்ந்து கண்டறிந்த தத்துவமே ஒப்படர்த்தி என்பதாகும்.

ஒருநாள் கிரேக்க மன்னனான இரண்டாம் ஹெய்ரான் ஒரு பொற்கொல்லனிடம் குறிப்பிட்ட எடையளவு கொண்ட தங்கத்தைக் கொடுத்து, அதே எடையுள்ள கிரீடத்தைச் செய்து தருமாறு உத்திரவிட்டான். பொற்கொல்லனும் சில நாட்களில் கிரீடம் செய்து கொண்டு வந்தான். கிரீடத்தின் அமைப்பையும், அழகையும் கண்டு மகிழ்ந்தான் மன்னன். ஆனாலும் மன்னனுக்குப் பொற்கொல்லனின் மேல் சந்தேகம். வெள்ளியைத் தங்கத்தோடு கலந்து கிரீடத்தைச் செய்திருப்பான் என்று சந்தேகப்பட்டான்.

எனவே, மன்னன் அரண்மனையில் உள்ளவர்களை அழைத்து கிரீடத்தை உருக்காமல் அதில் எவ்வளவு வெள்ளி கலந்துள்ளது என்பதைக் கண்டுபிடிக்குமாறு கூறினான். ஆனால் அவர்கள் அனைவரும் கிரீடத்தை உருக்காமல் கலப்பட வெள்ளியின் அளவைக் கண்டுபிடிக்கவே முடியாது எனச் சொல்லி விட்டனர். கிரீடத்தை உருக்க மனமில்லாத மன்னனுக்குச் சட்டென ஆர்க்கிமிடீஸின் நினைவு வர உடனே அவரை வரழைத்தான்.

ஆர்க்கிமிடிஸுக்குக் குளியல் தொட்டியில் தாம் இறங்கிய போது வெளிப்பட்ட நீரின் அளவு நினைவுக்கு வந்தது. அதே முறையில் கிரீடத்தில் கலந்துள்ள வெள்ளியின் அளவைக் கண்டுபிடிக்கத் தீர்மானித்தார்.

ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் நீரை நிரப்பி, கிரீடத்தை அழுத்தி அதில் மூழ்க வைத்தார். அப்பொழுது வெளியேறிய நீரை வேறொரு பாத்திரத்தில் பிடித்து அதை நிறுத்தி அதன் எடையைக் குறித்துக் கொண்டார். பின்னர் இன்னொரு முறை கண்ணாடிப் பாத்திரத்தை நீரால் நிரப்பி அதில் அரசன் பொற்கொல்லனிடம் கொடுத்த அதே அளவு தங்கக் கட்டியை அமிழ்த்தி, அப்பொழுது வெளிவந்த நீரை வேறொரு பாத்திரத்தில் பிடித்து அதன் எடையையும் நிர்ணயித்தார். தனி தங்கக் கட்டியால் இடம் பெயர்ந்த நீரின் எடை குறைவாக இருந்தது. எவ்வளவு எடைகுறைவாக இருந்ததோ, அவ்வளவு வெள்ளியை கிரீடத்தில் கலந்து அதற்குச் சமமான தங்கத்தை கிரீடம் செய்த பொற்கொல்லன் கையாடியுள்ளான் என்ற உண்மையைக் கண்டு பிடித்துச் சொன்னார் ஆர்க்கிமிடீஸ். அவருக்குப் பொன்னும் மணியும் பரிசாகத் தரப்பட்டன.

ஒருமுறை கிரேக்க நாட்டிற்கு மிகவும் ஆபத்தான நேரம். மன்னன் தன் சபையிலேயே மிகச் சிறந்த அறிஞர்கள் என்று போற்றப்பட்டவர்களை அழைத்து, “நம் நாட்டை போர் மேகங்கள் சூழ்ந்து விட்டன. எதிரியின் கப்பற்படை நம் கடற்கரையை நெருங்கிவிட்டது. அதைத் தடுத்து நிறுத்த உங்களால் ஏதாவது செய்ய முடியுமா?” எனக் கேட்டார். சிறிது நேரம் சிந்தித்த ஆர்க்கிமிடீஸ் “நீங்கள் கொஞ்சமும் கவலைப்படாதீர்கள் அரசே! அவர்கள் கப்பல்களைத் தடுப்பது மட்டுமல்ல, அழித்து

விடுகிறேன்" என்றார். அரசனுக்கோ ஆச்சர்யம். "எப்படி எதிரிகளின் கலங்களை அழிப்பீர்கள்?" என வினவ, "எரியச் செய்யும் கண்ணாடிகளால்" என அமைதியாகப் பதில் சொன்னார் ஆர்கிமிடீஸ்.

ஒன்றும் சொல்லாத அரசர் தலையை ஆட்டி ஒப்புதல் அளித்தார். ஆர்கிமிடீஸ் தமது திட்டத்தைச் செயல்படுத்தினார். மிகப் பெரிய குழிந்த கண்ணாடிகளை அமைத்தார். எதிரியின் கப்பல்கள் அருகில் வந்ததும் அந்த ஆடிகளைத் திருப்பிச் சூரியனின் வெப்பக்கதிர்கள் கப்பல்களின் மீது விழும்படி செய்தார். குவிக்கப்பட்ட சூரியக் கதிர்களால் அந்தக் கப்பல்கள் தீப்பிடித்தன. தனி ஒரு மனிதனாக நின்று தன் யுக்திகளால் சைரக்கூஸ் நாட்டைக் காப்பாற்றினார்.



கிறிஸ்து பிறப்பதற்கு முன் 287 முதல் 212 வரை இவரது காலம். அறிவியல் அற்பு

யுரேகா"

தங்கள் கடவுளுக்கு விரோதமானது என்று எண்ணிய காலம். சைரக்கூஸ் நாட்டை ரோமானியர்கள் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து முற்றுகை இட்டனர். அப்பொழுதெல்லாம் ஆர்க்கிமிடீஸ் தன் திறமையால் நாட்டைக் காப்பாற்றினார். ரோமானிய அரசன் மார்செல் ஒரு சமயம் சொன்னார்: "ஆர்க்கிமிடீஸ் என்ற அந்தக் கணித அரக்கன் இருக்கும்வரை நம்மால் ஒன்றுமே செய்ய முடியாது" என்று.

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நாள் இரவு சைரக்கூஸ் நாட்டு மக்கள் 'ஆட்ரிமிஸ்' என்ற நிலவுக் கடவுளுக்குத் திருவிழா கொண்டாடினர். அளவுக்கு மீறிக் குடித்துக் கூத்தாடி அறிவு மயங்கிய வேளையில் ரோமானியர்கள் கோட்டைக்குள் புகுந்து விட்டனர்.

பல நாட்கள் காத்திருந்த கோபத்தில் அவர்கள் நகரைச் சூறையாடினார்கள்.

ரோமானிய மன்னன் மார்செல், "ஆர்க்கிமிடீஸ் என்ற அற்புத மனிதரை ஒன்றும் செய்து விடாதீர்கள். அவர் நமது விருந்தினர்" எனத் தமது வீரர்களுக்குக் கட்டளையிட்டு இருந்தார். ஆனால் அந்தக் கட்டளை எல்லா வீரர்களுக்கும் எட்டவில்லை. ஆர்க்கிமிடீஸ் கடைத் தெருவில் அமர்ந்து ஏதோ வட்டங்கள் போட்டுக் கணிதப் புதிர்களைச் சிந்தித்துக் கொண்டிருந்தார். உருவிய கத்தியுடன் வரும் ரோமானிய வீரனைப் பார்த்து, "எனது அருமை நண்பனே! சற்றுப் பொறு. இந்த வட்டங்களை முடித்து விடுகிறேன். பிறகு உன் இஷ்டம் போல் என்னைக் கொல்லலாம்" என்றார். ஆனால் அதற்குக் கூட அந்த வீரன் செவி சாய்க்காமல் கத்தியைப் பாய்ச்சி ஆர்க்கிமிடீஸ் என்ற அந்த அறிவுச் சுடரைக் கொன்றுவிட்டான். இன்னும் சில காலம் அந்த மாமனிதன் இவ்வுலகில் உயிரோடு இருந்திருந்தால் பல விஞ்ஞான, கணித உண்மைகள் அன்றே மக்களுக்குச் சொந்தமாகி இருக்கும்.

— கோபி. ஜி.கே.எஸ். மூர்த்தி

உங்களுடன் ஒரு நிமிடம்

குஜராத்தின் துயரம்

குடியரசு பொன்விழா தினம் சோக தினமாகிவிட்டது. குஜராத்தில் மிகப் பெரிய அளவில் ஏற்பட்ட பூகம்பம் ஆயிரக்கணக்கான மக்களை பலி கொண்டு விட்டது. பல மாடி கட்டடங்கள் சரிந்து தரைமட்டமாகிவிட்டன. இடிபாடுகளிடையே மக்கள் அகப்பட்டு...

அரசு ராணுவத்தையும், உணவு, மருந்துகளையும் அனுப்பி உடனடி நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளது. ஆயினும் சமூக



சேவை புரியக் காத்திருக்கும் அமைப்புகளின் ஒத்துழைப்பும் மிகுதியாகத் தேவைப்படுகிறது. மக்களின் துயர் துடைக்க ஏராளமாகச் செலவு செய்ய வேண்டியிருக்கும். நிவாரண நிதி திரட்டப்படுகிறது. அவரவரும் தத்தமது வசதிக்கு ஏற்ப நேரில் சென்றோ அல்லது பணம் அனுப்பியோ உதவலாம். கோகுலம் சிறுவர் சங்கத்தினர் நிச்சயமாக தங்கள் பங்கைக் கடமையாகக் கருதி நிறைவேற்றுவார்கள்.

பூகம்பம் எதனால் ஏற்படுகிறது? பூமியின் மேல் மட்டத்தை (crust) என்று சொல்கிறார்கள். ஆரஞ்சுப் பழத்தின் தோல் மாதிரி! இதுவே இருபது மைல் கனமுள்ளது. இந்தத் தோல் பகுதியையும் பாறைப் பிரிவு என்றும் அதன்கீழ் ஆதாரப் பிரிவு என்றும் இரண்டாகப் பிரித்துள்ளார்கள். இந்த இரு பாகங்களையும் உள்ளடக்கிய பூமியின் மேல் மட்டத்தில் பாறைகள் பிளவு படுவதாலோ எரிமலை குமுறுகின்ற காரணத்தாலோ நில நடுக்கம் ஏற்படுகிறது. அதன் காரணமாக உருவாகும் அதிர்ச்சி அலைகளை ஸீஸ்மோகிராஃப் என்ற கருவி வரைபடமாக்குகிறது. சார்ல்ஸ் ரிச்டர் என்பவர் இதனை அளந்து சொல்லும் முறையை நிர்ணயித்தார். இதன்படி ஒரு மிதமான பூகம்பத்தின் அளவு 5.3 என்றும் பலமான பூகம்பத்தின் அளவு 6.3 என்றும் கூறுகிறார்கள். குஜராத்தில் தற்போதைய பூகம்பத்தின் அளவோ 7.9! எனவே சேதம் எத்தகையதாக இருக்கும் என்று நேரில் காணாதவர்களும் ஊகிக்கலாம். டீ.வியிலும் பார்க்கலாம்.

உலகின் மேல் மட்டத்தை (crust) ஆராய்ந்து பார்த்து எந்த எந்தப் பகுதிகளில் பெரிய அளவில் பூகம்பம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்று விஞ்ஞானிகள் கணித்திருக்கிறார்கள். இதில் வட இந்தியாவும் உள்ளடக்கம்.

எனவே வருமுன் காக்கும் விதமாக இதனைக் கருத்தில் கொண்டு அதற்கேற்ப கட்டடங்கள், தொழிலகங்கள், அணைகள் முதலியன அமைக்கப்பட வேண்டும். இதில் கருத்துச் செலுத்தி முன்னெச்சரிக்கையாகச் செயல்பட்டால் சேதங்களின் அளவையும் மனித உயிர்களின் இழப்பையும் கட்டுப்படுத்த முடியும்.

இன்றைய பூகம்பம் போல் கடந்த ஐம்பது ஆண்டுகளில் இன்னொரு பெரிய பூகம்பம் ஒரே ஒரு முறைதான் ஏற்பட்டிருக்கிறது என்கிறார்கள். போதும்! போதும்! இதற்கும் மேல் சோதிக்காதீர்கள் என்றுதான் இறைவனையும் இயற்கை அன்னையையும் வேண்டுகிறோம்.

- ஆசிரியர்

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-





''நீ பள்ளிக் கூடத்தில் சேர்ந்துட்டியாமே! எதுவரைக்கும் படிப்பே?''

''மணி அடிக்கற வரைக்கும்!''

– க. கந்தசாமி,
திருச்செங்கோடு.

''அந்தப் பஞ்சுக்கடை முதலாளி முதலில் குத்துச்சண்டை வீரரா இருந்திருப்பார் போலிருக்கு.''

''எப்படி சொல்றே?''

''கொஞ்சம் பஞ்சு கொடுங்கன்னு கேட்டதுக்கு முகத்திலே ஒரு 'பன்ஞ்' கொடுத்திட்டாரே!''

– கே.ஆர். உதயகுமார், சென்னை.



பப்பி எந்த நூலைப் பிடித்து இழுத்தால் ஐஸ்கிரீம் கிடைக்கும்?

விடை: 2



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2000*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka